Registered as a News Paper in Ceylon

★

விலே சதம் 15

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
EELA NADU
தேசிய தினசரி

S-LON
P.V.C. பைப்புகளும்
இணைப்புகளும்
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 12 தை 12 ஜுலகம் 27 (25—1—71) திங்கட்கிழமை இதழ் 345

# நாடெங்கிலும் சோஷலிஸ சுகாதாரத் திட்டம்

## அமைச்சர் ஆரியதாஸா தகவல்

கோட்டை, ஞாயிறு
சோஷலிஸ சுகாதாரத் திட்டம் நாடெங்கிலும் அமுலுக்குக் கொண்டுவரப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

சுகாதார அமைச்சர் திரு. ஆரியதாஸா இத்தகவலை இன்று வெளியிட்டார். வீமகம என்ற இடத்தில் புதிய வைத்தியசாலையைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பட்டினங்களிலுள்ள சகல வைத்திய சுகாதார வசதிகள் போன்று கிராமம்புறத்திலும் மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் இந்த சோஷலிஸ சுகாதார திட்டம் அமையுமென்று அமைச்சர் தெரிவித்தார்.

நவீன வசதிகள் கொண்ட ஆஸ்பத்திரிகள் நாடெங்கிலுமுள்ள கிராமப் புறங்களில் நிறுவப் படுவதும் சோஷலிஸ சுகாதாரத் திட்டத்தில் ஓர் அம்சம் என்றும் அவர் கூறினார்.

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேராவும் பேசினார்.

## பரீட்சை பகுதி உயர்அதிகாரி கட்டாய ஓய்வில் செல்வார்?

கொழும்பு, ஞாயிறு
அண்மையில் கல்விப் பொதுத்தராதரப் பரீட்சை யின்விளுத்தாள்கள் வெளியானதைத் தொடர்ந்து, பரீட்சைத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து கட்டாய ஓய்வில் அனுப்பப்படவிருக்கிறார் என்று அறியப்படுகிறது. இந்த இடத்திற்கு கல்வி அமைச்சின் துணைச்செயலாளர் ஒருவர் நியமிக்கப்படவிருப்பதாகவும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன

## தமிழ்ப்பகுதிக்குநடன ஆசிரியர் இல்லை?

யாழ்ப்பாணம், திங்கள்
சங்கீத ஆசிரியர்கள் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை இன்றுடன் முடிவடைகிறது. இதற்கான இறுதி நேர்முகப் பரீட்சை அடுத்த மாசம் கொழும்பில் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வழமையாக நடன ஆசிரியர்கள் நியமனத்திலதமிழ்ப் பகுதிகள்ஒதுக்கப்பட்டுவந்தன. இந்தமுறையும்விண்ணப்பங்கள் கோரப்பட்டனவே தவிர நேர்முகப்பரீட்சைக்கு யாரும் அழைக்கப்படவில்லை. இது விண்ணப்பித்தவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு பரத நாட்டியவித்தியாதரிசி ஒருவர் கூட இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

## இரத்தினக்கல்கூட்டுத்தாபன வேலைகளுக்கு ரூ.5 கோடி!

கோட்டை, ஞாயிறு
இரத்தினக் கூட்டுத்தாபனத்துக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா நேற்றுத் தெரிவித்தார்.

ஆட்சிமன்றத்தில் இரத்தினக்கல் கூட்டுத்தாபன மசோதாவைச் சமர்ப்பித்துப் பேசுகையிலேயே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கூட்டுத் தாபனத்துடன் ஒத்துழைக்கும் இரத்தினக்கல் வியாபாரம் சம்பந்தப்பட்டவர்களுக்கு வரி அறவிடுவதில் சலுகைகள் அளிக்கப்படுமென்று கூறினார்

ரத்தினக்கல் ஆழ்ந்து எடுக்கும் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அரசு வழங்குமென்றும் நிதி மந்திரி தெரிவித்தார்.

முன்னர் 5பேர் இக் கூட்டுதாபனத்தில் அங்கம் வகிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்போது 7பேராக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

## இருவாரத்துக்கு மந்திரிகள் வயல்களில் வேலை செய்வர்!

கோட்டை, ஞாயிறு
அமைச்சர்கள், நிரந்தரக் காரியதரிசிகள் உயர் பதவி வகிக்கும்அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தொடக்கம் கீழ்மட்டத்திலுள்ள ஊழியர் ஆகிய சகலரும் வருடத்தில் இரண்டு வாரமாவது வயல்களில் விவசாய வேலைகளில் ஈடுபட வேண்டும்.

அரசாங்க பார்லிமெண்டரிக் குழு நேற்றுக்கூடி மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துள்ளது.

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இத்த யோசனையைச் சமர்ப்பித்திருந்தார். அவரே நேற்றைய கூட்டத்துக்கும் தலைமை வகித்தார்.

பொதுமக்களுக்கு இது ஒரு உதாரணமாக இருக்குமென்றார். நிதி மந்திரி டாக்டர் என். எம்.

## 22 நாளில் 62 கொலை!

கொழும்பு, ஞாயிறு
22 நாட்களில் 62 கொலைகள் நடந்துள்ளன. இந்த மாதத்தில் முதல் 22 நாட்களிலுமே கொலை இந்த "சாதனை"யை நிகழ்த்தியுள்ளது

இந்த வேகத்தில் கொலைகள் நடந்தால், கடந்தவருடத்தையும் மிஞ்சிவிடுமென்று பொலிசார் அஞ்சுகின்றனர்.

## இந்தியாவில் குடியேற முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்
பிரபல தவில் வித்துவான் லய ஞான குபேர பூபதி திரு வி. தெட்சணாமூர்த்தி இந்தியப் பிரஜாவுரிமை பெற்றுக்கொண்டு தமிழ்நாட்டில்குடியேறுவதற்கு முயற்சிப்பதாகத் தெரிகிறது.

தமிழ்நாட்டில் அவருக்கு இருந்துவரும் கௌரவத்தைக் கருத்திற்கொண்டு, அவர் அங்கு செல்லவிருப்பதாகத் தெரிகிறது.

## கனடாப்பிரதமர் இன்று இலங்கை வருகிறார்!

கோட்டை, திங்கள்
கனடாப்பிரதமர் திரு. ரூடோ ஐந்துநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார். இன்று பிற்பகல் 2-10மணிக்கு பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் வந்து சேருவார்.

பிரமச்சாரிப் பிரதமரான இவர், கனடா உதவியுடன் கட்டப்பட்ட பண்டாரநாயக்கா சர்வதேசவிமானநிலை

(8-ம் பக்கம் பார்க்க)

நாட்டை விட்டு வெளியேற

## பாகிஸ்தான் அதிகாரிக்கு இந்தியா உத்தரவு

புதுடில்லி, ஜன.24
காஷ்மீரில் உளவுவேலையில் ஈடுபட்டார் என்பதன் பேரில் புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிசன் முதலாவதுகாரியதரிசி திரு. ஸபர் இக்பால்ரத்தோட்டை விரும்பத்தகாத நபரென அறிவிக்கப்பட்டு, 48 மணி நேரத்தில் நாட்டைவிட்டு வெளியேறுமாறு இந்திய அரசாங்கததால் உத்தரவிடப்பட்டுள்ளார்.

புதுடில்லியிலுள்ள கவுன்சிலரிடம் இந்திய வெளிவிவகார அமைச்சின் கூட்டுக்காரியதரிசிதிரு. அசோக்ராய் உத்தரவுக்குறிப்பைக் கொடுத்தார்.

அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; காஷ்மீரில் நடைபெற்ற விசாரணைகளிலிருந்து, கஷ்மீரில் ஏற்பட்ட உளவு வேலைகளில் முதல் காரியதரிசிக்கு தொடர்புள்ளதாகத் தெரியவந்துள்ளது. அவ்விசாரணையின்படி காஷ்மீரில் நாசவேலைகள், உளவுபார்த்தல், வன்முறைச் செயல்கள் புரிந்துவரும் அல்பட்டா இயக்கத்தை வகுத்து வழிகாட்டுவதில் திரு ரத்தோட்பெரும் பங்கு வகித்திருப்பதுதெரியவந்துள்ளது. ஒரு தூதுவ அதிகாரி நடந்துகொள்ளவேண்டிய நெறிமுறைகளுக்கு மாறாக இவர் நடந்து

(8-ம் பக்கம் பார்க்க)

## முன்னைய 173 இடங்களிலும் தி. மு. க. போட்டியிடும்?

சென்னை, நவ.24
சென்னையில் தி.மு.க. தலைமையிலான 7 கட்சி கூட்டணியின் ஒழுங்கிணைப்புக் கமிட்டி தொகுதி உடன்பாடு குறித்து ஆலோசனை நடத்தி பின்வருமாறு தொகுதிகளை ஒதுக்கியுள்ளது.

| | லோக் | | சட்ட. |
|---|---|---|---|
| பாரதகம். | 4 | - | 4 |
| போவார்ட்புளக் | 1 | - | 9 |
| முஸ் லீக் | 1 | - | 8 |
| பிரஜா | 4 | - | 8 |
| தமிழ் கழ. | | - | 2 |

சென்னை, செங்கல்பட்டு வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய இடங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களுக்குத் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு சட்டசபைக்கு 1967-ம் ஆண்டு போட்டியிட்ட 173 இடங்களுக்கு மேல் தி. மு. க. அபேட்சகர்களை நிறுத்தும். ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரசுடன் உடன்பாடு ஏற்படுமானால் இது சிறிது குறையலாம் என தி. மு க. பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

### தி. மு. க. மாநாடு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு இன்று 10-30 மணிக்கு ஐலண்ட் நகரிலிருந்து பிரமாண்டமான ஊர்வலத்துடன் ஆரம்பமாகியது. ஊர்வலத்தின் முகப்பில் அலங்கரிக்கப்பட்ட யானை செல்ல அதனைத் தொடர்ந்து குதிரைகள், பஸ்கள், லொறிகள், கார்கள் சென்றன.

இம்மாநாடு அசோக் நகரில் நடைபெறும்.

## இக்னேசியஸ் சிலை

மட்டக்களப்பு, ஞாயிறு
யேசுசபைக் குருமார் இலங்கையிற் பணியாற்றத் தொடங்கிய 75 வருட ஞாபகார்த்தமாக மட்டக்களப்பில், யேசுசபையின் ஸ்தாபகர் புனித இக்னேசியஸ் லோயலா அவர்களின் சிலையொன்று நிறுவுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.


### ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
காந்தராவ் — ராஜ்ஸ்ரீ
நடித்த
மன்னனைக் காத்த மாவீரன்

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 4 shows
Lee Marvin
Angie Dickinson
in
POINT BLANK
(Adults only)
(Cinemascope&colour)

RAJAH
(Jaffna)
Daily at 4-45.7.9-45p.m.
Jeffrey Hunter
Arthur Kennedy
in
MURIETA
(Eastman color)


## பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

அராலி, ஞாயிறு
அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு பதிமநாதன் உபதலைவர்கள் திருவாளர்கள் மு சதாசிவம், ஆ. கயிலாயபிள்ளை, காரியதரிசிகள் திருவாளர்கள் ச. அம்மையப்பர், க. கந்தசாமி, தனாதிகாரி திரு வே. ஐயாத்துரை ஜே. பி. மற்றும் 9பேர் அடங்கிய நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.


### வெல்லிசினிமா

சாவிப்பார்
தினசரி 2-30, 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

### மனோகரா

(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 10-00 மணி
ராஜ்குமார் - ராதிகா
நடித்த
ஜாக்பாட்டில் ஸி. ஐ. டி. 999

### ராணி சினிமா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்
சிவாஜிகணேஷன் - சரோஜாதேவி
நடித்த
அ ன் ப ளி ப் பு

### வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி
நடித்த
ச க் க ர ம்

### வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு)



சிவாஜி - காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ் முத்துராமன்
இன்னும் பலர் நடித்த
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்
சிவந்த மண்

### மைலன் (கொழும்பு)

தினசரி 2-00, 6-00 9-00
சிவாஜி - எஸ். எஸ்.ஆர்.
நடித்த
பெற்றமனம்


## முல்லைத்தீவில் கம்யூ. கட்சி கிளை அங்குரார்ப்பணம்

முல்லைத்தீவு, ஞாயிறு
முல்லைத்தீவில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப முன்னணிக் கிளை ஒன்றை திரு. செ. பத்மநாதன் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

இவ்வைபவத்தில் வவனியாக்கிளைத்தலைவர் ஜனாப் யூசிப். மற்றும் திரு. ப. க. கணேசவேல் ஆகியோரும் பங்குபற்றி உரையாற்றினர்.

முல்லைத்தீவுக்கிளையின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. செ. மகேந்திரசிங்கம், உபதலைவர்: திரு ம சிவகுருநாதன், செயலாளர்: ஜனாப் கே எம் அகமட்கான், உதவிசெயலாளர்: திரு இ இராசையா, தனாதிகாரி: ஜனாப் எஸ். எலியாஸ் மற்றும் ஐந்து பேர்கொண்ட நிருவாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## இன்றைய பலன்

தை மாதம் 12-ந் திகதி
(25-1-71)

மேஷம்- வருமானத்தில் திருப்திகரமானநிலை தென்படும். புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள்

ரிஷபம்- மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்திருந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று

மிதுனம்- தனத்துடன் வாழ்வு இன்று தவருது கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு

கடகம்- உஷ்ணத்தின் தாக்குதல் உடலைப் பாதிக்கும். நயன ரோகத்திற்கு இடமளியாது நடந்துகொள்ளவும்.

சிம்மம்- பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள். பிதாவழித் தனமும் சேரும். தான தருமங்களில் ஈடுபாடு ஏற்படும்

கன்னி- கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும்.

துலாம்- இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதுத் தொழில் முறைகளை மனம் நாடும். நீண்ட பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்

விருச்சிகம்- துன்பத்தின் சாயல் மனதிலே படியும். புனைந்துரைகளால் மனது புண்படும். சிலர் உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொள்வார்கள்.

தனுசு- சிறிய விடயத்திற்குக்கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடும் இடம்பெறும்.

மகரம்- திடீர் வரவுகளுக்கும் இடமுண்டு வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் உண்டு

கும்பம்- சிறிவரும் கோபம் பெரியோர் மோதலை ஏற்படுத்தும் எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும்.

மீனம்- தன்மான மிகுதிக்கும் தனவரவுக்கும் இடம் உண்டு. சிலருக்கு வாகன சுகமுண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


### விற்பனைக்கு

பிறவுண் ரோட்டில் பூர்த்தியடையாத வீடு இரண்டு பரப்புக் காணியில்

விலை 21000/-

செட்டித்தெருவில் சிறிய வீடு + ஒன்றே முக்கால் பரப்பு

விலை 20,000/-

யக்கச்சி கிழக்குத் தோட்டம் பத்து ஏக்கர் துண்டுகள்

விலை 5000/-

பரந்தன் பூநகரி ரோட்டில் 32 ஏக்கர் வயல்

விலை 24,000/-

லான்ட் இன்வெஸ்ற் மென்ட்ஸ்,
6, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7453
2741

### செங்கதிர்ச் செல்வர் கல்விச் சேவை

மாலை நேரங்களில் எமது கல்விச் சேவையினுக்கூடாக குருநாதசுவாமி கோவிலடி, பலாலி ரோட், யாழ்ப்பாணத் திக்கருகாமையிலும்
கலை, விஞ்ஞானபட்டதாரி ஆசிரியர்களினால்
சகல வகுப்புகளும் நடாத்த வசதி செய்யப்படுகின்றன. இப்பாடசாலையில் சேர விரும்புபவர்கள்
பெப்ரவரி 5ஆம் திகதிக்கு முதல் விண்ணப்பஞ் செய்யவும்.
த. பெ. இல: 47,
யாழ்ப்பாணம்.
குறிப்பு: நேரே விபரம் பெற விரும்புவோர் திரு. S. செகராஜசிங்கம், 117/6, அத்தியடி, பிள்ளையார் கோவிலடி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 25—1—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீ. அன்ட் 49 மீ.
பகல் 12-00 சித்திரகானம், 1-00 சதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.
மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்தினவாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-30 விவசாயநிகழ்ச்சி, 6-45 சுகாதாரநிகழ்ச்சி, 7-00 வாத்தியஇசை, 7-15 வயலின், 7-45 சூறன் இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

காங்கேசன்துறை சந்திக்கு அண்மையில் யாழ்ப்பாண வீதியில் இருக்கும் 22-ம் இலக்க காணி, வீடு, கிணறு, மலகூடம் ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு No. 6, சங்கிலியன்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2678

உங்களுக்கு காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி (Hearing-aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது சிடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட் 122, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 2680

கார்:
ஆஸ்டின் சோமர்செட் மோட்டோ கார் E Y 4000 தொடர் இல. நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: இன்ஸ்பெக்டர் அமீர், பண்ணை பொலிஸ் குவாட்டர்ஸ் யாழ்ப்பாணம். 2683

### தேவை

நன்ருக வேலை செய்யக்கூடிய பியோன் தேவை. இருபத்தைந்து வயதுக்குட்பட்டவராயும் சைக்கிள் வைத்திருப்பவராயும் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிப்பவராயும் இருத்தல் வேண்டும். லான்ட் இன்வெஸ்ற் மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2677

றேடியோ திருத்துவதில் 10 வருட அனுபவமுள்ளவர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். ரமணி கோப்பரேஷன்(Ramani Corporation) 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2672

ஆசிரியர்:
ஜீ. சி. ஈ. O/L, A/L மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம், கலைப்பாடங்கள் போதிப்பதற்கு ஆசிரியர் தேவை. 2-2-71-ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். சிக்கனக் கல்வி நிலையம், (TheEconomyEducation Centre) டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். 2684

### பயிற்சி

ஆர்மச்சர் மோட்டார் றீவைண்டிங், தமிழில் இலைப்பாறிய மின்சார பொறியியலாளர்களால் பயிற்சிஅளிக்கப்படுகின்றது. விபரங்களுக்கு: இன்டஸ்றியல் கிராப்ட்ஸ் இன்ஸ்ரிற்றியூற், 443/5, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். 2681


இ. போ. ச.

## அலுமினியம் இறக்குமதியை நிறுத்தியது

கோட்டை, திங்கள்
இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்களுக்கு அலுமினியம் இறக்குமதி செய்தலை நிறுத்தியுள்ளது. இங்கு அலுமினியத்தை உருக்குவதற்கு நிறுவப்படவிருக்கும் யந்திர சாதனங்களைக் கொண்டு இங்கு பழுதடைந்த பஸ்களின் அலுமினியத் தகடுகளை உருக்கி இந்தியாவுக்கு அனுப்பி அங்கிருந்து அலுமினியத் தகடுகளைப் பெறுவது என இ.போ.ச. தீர்மானித்துள்ளது. மேற்படி யந்திரசாதனங்களை நிறுவுவதற்கான வேலைகள் இரத்மலானையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

# காங்கிரசுடன் உடன்பாட்டுக்கு வாய்ப்பிருக்கிறது

## தி. மு. க. ஒருங்கிணைப்பு கமிட்டி நம்பிக்கை

சென்னை, ஜனவரி 24

**திராவிட முன்னேற்றக் கழகமும் ஜகஜீவன்ராம் தலைமைக்காங்கிரசும் கூட்டணி அமைப்பதற்கு இன்னமும் வாய்ப்பிருப்பதாக திராவிட முன்னேற்றக் கழக ஒருங்கிணைப்புக் கமிட்டி தெரிவித்துள்ளது.**

தி. மு. க.—ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரசும் கூட்டணி அமைப்பது பற்றி நடத்திய பேச்சுவார்த்தையில் தொகுதி உடன்பாடு செய்வதில்ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இப்பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததற்கு ஒருங்கிணைப்புக் கமிட்டி வருத்தம் தெரிவித்துள்ளது: பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்த போதிலும் மேலும் இரு பகுதியினருக்கும் உடன்பாடுகள் ஏற்படுவதற்குரிய வாய்ப்புக்கள் இருப்பதாக அக்கமிட்டி தெரிவித்துள்ளது.

தி. மு. க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளான பாரத கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக், தமிழரசுக் கழகம், போவார்ட் புளக், பிரஜா சோஷலிஸ்ட் ஆகிய கட்சிகளுக்கு சில தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இன்று நடைபெறும் ராஜ்ய மாநில மகாநாட்டின் பின் கூட்டணிக் கட்சிகளுக்கான தொகுதிகள் தெரியவரலாம்.

இம்மகாநாட்டின் பின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரகடனம் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

---

தென் ஆபிரிக்காவுக்கு ஆயுத விற்பனை

## பிரிட்டன் எந்த உறுதி மொழியையும் வழங்கவில்லை

### இலங்கை வந்த கானா அதிபர் கூறுகிறார்

கோட்டை, ஞாயிறு

பிரிட்டன் தென்னாபிரிக்காவுக்கு ஆயுத விற்பனை செய்வது சம்பந்தமாக எந்தவித உறுதிமொழிகளையும் வழங்கவில்லையென்று கானா அதிபர் கொவ்வியா புஸ்ஸியா நேற்றுக் கூறினார்.

சிங்கப்பூரில் நடந்த சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டுத் தாயகம் திரும்பும் வழியில் கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயகா சர்வதேச விமான நிலையத்தில் சிறிதுநேரம் தங்கிச் சென்றார்.

பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு கானாஅதிபர் பதிலளித்தார்.

சிங்கப்பூர் மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு நேற்றிரவு இலங்கை திரும்பிய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ வந்துசேர்ந்த விமானத்திலேயே கானாப் பிரதமரும் பிரயாணம் செய்தார். நேற்று இரவு 11-30மணிக்குச் சற்றும் முன்னதாக இவர்கள் வந்த விமானம் விமான நிலையத்தை வந்து சேர்ந்தது. சுமார் 40 நிமிட நேரம் கானா அதிபர் இங்கு தங்கிச் சென்றார்.

தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்பனை செய்யும்போது நிபந்தனை செய்யலாமென்றும், வர்த்தகப் பாதுகாப்புக்கு மட்டும் இதனைப் பாவிக்கலாமென்றும் நிபந்தனை விதித்து ஆயுத விற்பனை செய்யலாமென்றும் அவர் தெரிவித்தார்.

---

### அடையாள அட்டைகள்

கோட்டை, திங்கள்

எதிர்வரும் சிறுபோகப் பயிர் செய்கைக்கு முன்னர் 8000 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. தற்போது இந்த அடையாள அட்டைகள் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன

---

பிரிட்டன்

## அலட்சியப்படுத்தினல் தீவிர விளைவுகள் ஏற்படும்!

### ஸாம்பியா அதிபர் எச்சரிக்கை

லூசாக்கா, ஜன 24

தென்னாபிரிக்காவிற்கு பிரிட்டன் ஆயுதம் கொடுக்கும் விஷயத்தில் சாம்ராஜ்ய நாடுகளின் கருத்தை பிரிட்டன் அலட்சியப்படுத்துமானல் அதனால் தீவிர விளைவுகள் ஏற்படுமென ஸாம்பியா அதிபர் கெனத் கவுண்டா பிரிட்டனை எச்சரித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பியபின் இவ்வெச்சரிக்கையை ஜனதிபதிகவுண்டா விடுத்துள்ளார்.

இவ்விஷயத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத் காலதாமதஞ் செய்யலாமென்றே தாம் நம்புவதாகத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்னாபிரிக்காவிற்கு பிரிட்டன் ஆயுத விற்பனை செய்வது சம்பந்தமாக ஸாம்பியா கொண்டிருக்கும் கருத்தையும் போக்கையும் சிங்கப்பூரில் நடைபெற்ற பிரதமர்கள் மகாநாட்டில் சாம்ராஜ்ய நாடுகள் எவ்வாறு ஏற்றுக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு நாடுகள் ஸாம்பியாவின் கருத்தை ஏற்றுக் கொள்ளுகின்றன என்பவற்றைக் காணக்கூடியதாக இருந்தது என்றார்.

## சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஹீத் கலந்தாலோசிப்பார்

லண்டன், ஜன 24

சிங்கப்பூர் மகாநாட்டில் சர்ச்சைக்குரிய பிரச்னையாக இருந்த தென்னாபிரிக்க ஆயுதவிற்பனை இந்துமகா சமுத்திர பாதுகாப்பு ஆகிய விஷயங்கள்பற்றி பிரிட்டிஷ் பிரதமர் ஹீத் தனது சிரேஷ்ட அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத் லண்டன் திரும்பியுள்ளார்.

இவ்விரு விஷயங்களில் பிரிட்டனின் போக்கை ஆசிய ஆபிரிக்க நாடுகள் மகாநாட்டில் பலமாகக் கண்டித்தன. மகாநாட்டில் பிரதமர் ஹீத் கடுமையாக நடந்து கொண்டதாகவும் தென்னாபிரிக்காவுடன் செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தம்பற்றி ஹீத் தெரிவித்த தகவல் தவறு என்றும் தொழிற்கட்சி அரசாங்கத்தில் இருந்தபொழுது தென்னாபிரிக்காவிற்கு ஆயுத விற்பனை நிறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வெதிர்ப்புக்களினால் இப்பிரச்னைகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு முக்கிய பிரச்னையாக இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ஹீத் தனது சிரேஷ்ட அமைச்சர்களுடன் அடுத்த வாரத்தில இவ்விஷயங்கள்பற்றி பேச்சுவார்த்தை நடத்தலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


புகையிலை, தென்னை,
காய்கறிப் பயிர்களைப்
பாதிக்கும்
இந்தப் பூச்சி
புழுக்களை
அழித்து உங்கள்
பண வருவாயைப்
பாதுகாக்க,




# மெற்றசிஸ்டொக்ஸ்'ஆர்'




குத்தும், உறிஞ்சும் சகல பூச்சிகளையும் கொன்றொழிக்க வல்லது மெற்றசிஸ்டொக்ஸ். அது ஒரு தொகுதிப் பூச்சி கொல்லி. தெளித்ததும் அது பயிர்ச் சாற்றுடன் சேர்ந்து, காய்கறியைத் தாக்கும் அழுக்கணவன், ஒட்டுண்ணி, வெண் ஈ, பனிப்பூச்சி, பேன், தென்னையைத் தாக்கும் செவ்வண்டு, அனைத்தையும் அழிக்கும்.

மெற்றசிஸ்டொக்ஸ்—ஒரு பேயர் தயாரிப்பு. அது நம்பிக்கையான, விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.

| | |
|---|---|
| உற்பத்தியாளர்: | இலங்கையில் விநியோகிப்போர்: |
| பேயர், | ஹேக்கெம் லிமிட்டெட், |
| ஜெர்மனி. | 400, டீன்ஸ் வீதி, |
| | கொழும்பு 10. |

### மணிவாக்கு

சத்தியத்தையும், அன்பையும் உபாசிப்பவன் நாளைக்காக ஒன்றும் சேமித்து வைக்கமாட்டான். —மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu Jaffna. Daily
Telegrams: "EELANADU" Jaffna
Box 49, Jaffna. Telephone

சாதாரண வருடம் தை மாதம் 12-ந் திகதி (25-1-71)

# பிரதமரின் வெற்றி

சிங்கப்பூரில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாட்டில் கலந்துகொண்டு மிக முக்கியமான விஷயங்களில் மிகத் துணிச்சலான கருத்துக்களைத் தெரிவித்து மகாநாட்டையே கலகலப்பாக்கி, மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்ற புகழை இலங்கைக்கு ஏற்படுத்திக்கொண்டு பிரதமர் திருமதி சிறிமா வெற்றியுடன் நாடு திரும்பியிருக்கிறார். சிங்கப்பூர் மகாநாட்டில் கலந்துகொண்டு நாடு திரும்பும் வழியில் இலங்கையில் சில நிமிட நேரம் தங்கிச் சென்ற ஸாம்பியா அதிபர் திரு. கென்னத் கௌண்டா, காமன் வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் செலுத்திய பங்கு பற்றி வெகுவாகப் புகழ்ந்திருப்பது 'வெறும் புகழ்ச்சி'யல்ல ஆசிய-ஆபிரிக்க நாடுகளையும் அவற்றின் தலைவர்களையும் எப்போதும் ஒரு விதமாகப் பார்க்கும் மேலைநாட்டுப் பத்திரிகைகள் கூட சிங்கப்பூர்மகாநாட்டு நடவடிக்கைகளுக்கும் பிரதமர் சிறிமாவின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதே இதற்குச் சான்று.

காமன் வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாடு பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை என்றாலும் இந்த மகாநாட்டோடு 'காமன் வெல்த்' குடும்பம் சிதறிவிடாமல் காப்பாற்றப்பட்டது ஒரு சாதனைதான். இந்தச் சாதனையில் இலங்கைப் பிரதமருக்கு அதிக பங்கு உண்டு.

சர்வதேச அரங்கில் இலங்கையின் புகழை நிலைநாட்டுவதில் பிரதமர் திருமதி சிறிமாவுக்கு நிகராக இதற்கு முன் பிரதமர் பதவிவகித்தவர்கள் எவரையும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக இல்லை. 1962-ம் ஆண்டில் இந்திய-சீன எல்லைத் தகராறு ஏற்பட்டபோது திருமதி சிறிமா மேற்கொண்ட முயற்சியையும் இச்சமயத்தில் நினைவுகூருவது பொருத்தம்.

கூட்டணி அரசாங்கம் ஆட்சி பீடத்துக்கு வந்ததும் உலக நாடுகளில் இலங்கையைப் பற்றித் தவறான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அப்பிரசாரம் பிரதமரின் ராஜதந்திரத்தினால் பெருமளவு முறியடிக்கப்பட்டிருக்கிறது.

உலக நாடுகளில் இலங்கையின் புகழை உயர்த்தவும் அதே சமயம் உள்நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டி நாட்டைப் புதிய பாதையில் முன்னேற்றுவதற்கும் திருமதி சிறிமா தலைமையிலான கூட்டணி அரசாங்கம் திட்டமிட்டுச் செயல்பட முனைந்திருக்கிறது.

பிரதமர் சிறிமா வெளிநாடுகளில் இந்த முயற்சியைச் செயற்படுத்த முனையும் அதே சமயம் உள்நாட்டில் இந்தப் பணியை நிறைவேற்றுவதில் இதர அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் முனைந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் நடைமுறையில் உள்நாட்டு முயற்சி போதியளவு முன்னேறவில்லை.

சிங்கப்பூர் மகாநாட்டுப் பிரகடனத்தில் 'இன,மத நிற வேறுபாடு காட்டுவதைக் கண்டிக்கும் ஓர் அம்சமிருக்கிறது. இந்தப் பிரகடனத்தில் இலங்கைப் பிரதமரும் கைச்சாத்திட்டிருக்கிறார்.

இன, மத, சாதி வேறுபாடு காட்டப்படமாட்டாது என்று பிரதமர் சிறிமா உட்பட அமைச்சர்கள், உதவி அமைச்சர்கள் ஆகியோர் இடையிடையே கூறிவருகின்றனர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குச் செல்லும் போது 'வேறுபாடு காட்டமாட்டோம்' என்று வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

ஆனால் செயலில் இது எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகிறது என்பது சந்தேகத்துக்கிடமாக இருக்கிறது.

சிங்கப்பூர் மகாநாட்டில் பெரும் பங்கு செலுத்திப் புகழோடு திரும்பியிருக்கும் பிரதமர் உள்நாட்டில் சில முக்கிய பிரச்னைகளை, கடமைகளைச் செய்யவேண்டிய பொறுப்பு இன்று அதிகரித்திருக்கிறது.

அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானங்கள் வேலையில்லாத்திண்டாட்ட அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு-உயர்வு ஆகியவைகளில் அதிக கவனம் செலுத்தவேண்டிய அவசியத்துடன் 'பாகுபாடு' என்ற புகார்களை நீக்கி சகலருக்கும் சமத்துவம் கிடைக்க வழிகாணவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

---

காங்கேசன்துறை பட்டினசபை

# புதிய தலைவராக குருசாமி தெரிவு

மாவிட்டபுரம், ஞாயிறு காங்கேசன்துறை பட்டினசபையின் தலைவராக தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு. இலங்கையர் குருசாமி இன்று ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். ஏற்கனவே செய்யப்பட்ட கனவான்கள் ஒப்பந்தப்படி இவர் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டார்.

''கனவான்கள் ஒப்பந்த''த்தை மதித்து முதல் வருடம் தலைவராக இருந்த திரு. கே ஜெயபாலசிங்கம் ராஜினாமாச் செய்தது தெரிந்ததே.

திரு. கே. ஜெயபாலசிங்கம் பிரேரிக்க திரு. எஸ். நாகரத்தினம் இப்போதைய தலைவரின் பெயரை அனுமதித்தார்.

புதிய தலைவர் திரு. குருசாமி நன்றிதெரிவித்துப் பேசுகையில், ''கனவான் ஒப்பந்தத்தை'' மதித்து ராஜினாமாச்செய்த பழைய தலைவர் திரு. ஜெயபாலசிங்கத்துக்கு நன்றி தெரிவித்தார்.

திரு. கே. ஜெயபாலசிங்கமும் மற்றும் சிலரும் பேசினர்

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. நல்லநாதன் முன்னிலையில் புதிய தலைவர் தெரிவு நடந்தது புதியதலைவர் வீடுவரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

---

# யாழ். திறந்தவெளி அரங்கு நடே... சிலைக்குக் கண்டனம்

# சைவாலயம் போல் காட்சி அளிப்பதாகப் பிரேரணை

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். திறந்த வெளியரங்கின் முகப்பில் நடேசர் சிலையை அமைத்து, அது சைவாலயம்போல் காட்சியளிப்பதை கண்டிக்கும் தீர்மானம் ஒன்று யாழ்ப்பாணம் மாநகர சபை மாதாந்தக் கூட்டத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது

பெப்ருவரி மாதம் 5ம் திகதி மாலை மாநகரசபை முதல்வர் திரு ரி எஸ். துரைராசா தலைமையில் நடைபெறவிருக்கும் மாதாந்தக் கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கப்படும். மாநகரசபை உறுப்பினர் திரு ஏ. போல்ராஜா இதற்கான முன்னறிவித்தல் ஒன்றைக் கொடுத்துள்ளார்.

இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், கத்தோலிக்கர்களும் வாழும் யாழ்ப்பாணத்தின் திறந்த வெளியரங்கின் முன்பு சைவ ஆலயம் போன்று அமைந்திருப்பது ஏனைய சமயத்தவர்களை இழிவு படுத்துவதுபோலிருக்கிறது என்று திரு. போல்ராஜா தமது பிரேரணையில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. போல்ராஜா சமர்ப்பித்துள்ள முன்னறிவித்தல் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:'யாழ் திறந்தவெளியரங்கு மகா தேசாதிபதியின் வருகைக்குப் பிற்பாடு சைவ ஆலயம்போல் காட்சியளிக்கிறது. இந்துக்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும், கத்தோலிக்கர்களும் வாழும் யாழ்ப்பாணத்தின் திறந்தவெளியரங்கின் முகப்பு சைவ ஆலயம் போன்று அமைந்திருப்பதும்; அதன் நடுவே சிவபெருமானின் நர்த்தன நிலையைப் பிரதிபலிக்கும் சிற்பம் அமைக்கப்பட்டிருப்பதும் மற்றைய சமயத்தவர்களை இழிவுபடுத்துவது போலாகுமாதலால், இச் செயலை இச்சபை வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர்களின் மனதைப் புன்படுத்தாத வகையில் ஆவன செய்யப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது'.

விரைவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட விருக்கும் இலங்கை மாநகரசபைகளின் சங்கத்தில் யாழ்ப்பாணம் மாநகரசபையின் சார்பில் பிரதிநிதித்துவம் வகிக்கும் முதல்வர், உதவி முதல்வர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களில் ஐந்தில் ஒரு பகுதி உறுப்... தெரிவு செய்... இக் கூட்டத்தில்... கப்படும்.

...த்தி பல... தொழில் இன்... படும் மாண... நிலைமை- தற்... கற்றுவரும் ம... கும் ஏற்படாவ... சாலைகளில் மற்... களுடன் வர்த்... தொழில் ஆகி... நுட்பக் கல்வி... முதல் அவர்க... கக் கூடிய ... செய்யும்படி க... ரைக் கேட்... வேண்டும் ... ரணையை திரு... அன்ரனி கொ...

திரு. அன்ரனி ... வித்தல் கொடு... றைய பிரேரணை... 'நகரின் சுகாதா... ரம், ... னீர், ... வசதிகள் முதல்... கவனித்து ஆ... வேண்டிய பொ... கரசபை உறுப்... உடையதாக ... ஆட்சிமன்ற ... ளுக்கு கொடுக்... பளம், அலவ... வசதிகளில் சி... வது சகல நக... ராட்சி மன்ற ... ...ம்வழங்க... எடுக்கும்படி ... அமைச்சரைக் ... கொள்வதென ... தீர்மானிக்கிறது...

---

# யாழ்ப்பாணத்தில் பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம்

யாழ்ப்பாணம் திங்கள் 'யாழ்ப்பாணத்தில் பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் விரைவில் நிறுவப்படவிருக்கிறது' என்று வட பகுதி அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தெரிவித்தார்.

நவீன ரீதியில் பனம் பண்டங்களை தயாரிப்பது பற்றியும், விஞ்ஞான உபகரணங்கள் மூலம் பனை மரத்தை தகுந்த முறையில் உபயோகிப்பது பற்றியும், பனம் பண்டங்களை இரசாயன மருந்துகளின் உதவியுடன் அதிக காலம் பழுதுபடாமல் வைத்திருப்பது பற்றியும் இந்த நிலையத்தில் ஆராய்ச்சி செய்யப்படும். (கு. வி. ம.)

---

# உள்ளூராட்சிஓவசியர்களுக்கு மோட்டார் சைக்கிள் அலவன்ஸ்!

### 7 லிருந்து 48 ரூபாயாகும்

யாழ்ப்பாணம், திங்கள் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் ஓவசியர்களின் சைக்கிள் அலவன்ஸ் ஏழு ரூபாய் 48ரூபாயாக உயர்த்தப்படும். இது அவர்களின் மோட்டார் சைக்கிள் அலவன்ஸாகவழங்கப்படும்.

தம்மைப் பேட்டிகண்ட ஐக்கிய உள்ளூராட்சிசேவை ஓவசியர் சங்கத்தலைவர் திரு. எஸ். குலசூரியனிடம் இந்த உறுதியை உள்ளூராட்சி சேவைத் தலைவர் திரு. டொன்டேவிட் அளித்தார்.

மோட்டார் சைக்கிள் அலவன்ஸ் குறித்தும் மற்றும் தமது பிரச்னைகள் குறித்தும் உள்ளூராட்சி சேவைத்தலைவரை ஐக்கிய உள்ளூராட்சி அங்கத்தவர் பேட்டிகண்டார்.

உள்ளூராட்சி ஓவசியர்கள் கடமையாற்றும் பகுதியின் எல்லை விஸ்தீரணத்தை ஒடு சாட்டாக வைத்து மோட்டார் சைக்கிள் அலவன்ஸ் வழங்க மறுத்தால் அது பற்றி தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் உள்ளூராட்சி சேவைத் தலைவர் தம்மிடம் தெரிவித்ததாக திரு. எஸ். குலசூரியன் தெரிவித்தார்.

---

# கண்டி, சிகிரியாவுக்கு கயானா பிரதமர் விஜயம்

கோட்டை, ஞாயிறு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு தமது துணைவியாருடன் வந்துள்ள கயானா பிரதமர் பேணிட்காம் கண்டி, சிகிரியா ஆகிய இடங்களுக்கு விஜயம்செய்வார்.

இலங்கை அரசாங்கத்தின் விருந்தினராக வந்துள்ள கயானா பிரதமர் நேற்றிரவு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடன் அதே விமானத்தில் வந்துசேர்ந்தார். சிங்கப்பூரில் நடந்த சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் கயானா பிரதமரும் கலந்துகொண்டார்.

கட்டுநாயக்கா விலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் வந்திறங்கிய கயானா பிரதமரை முதலில் அதே விமானத்தை விட்டு இறங்கிய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வரவேற்றார் பதில் அரசாங்கத் தலைவராகக் கடமையாற்றிய திரு. மைத்திரிபால சேனநாயக்கா, மற்றும் அமைச்சர்களுக்கு பிரதமர், கயானா பிரதமரை அறிமுகம்செய்து வைத்தார்.

கயானா பிரதமர் கொரகொல்லையிலுள்ள காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சமாதிக்கு மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்துவார் 27-ம் திகதி தாயகம் திரும்புகிறார்.

---

பனம் பொருள் உற்பத்தி

# தீவுப்பகுதி மக்களு... நன்மை கிடைக்கு...

ஊர்காவற்றுறை, ஞாயிறு பனம் பொருட்களை உற்பத்திசெய்வதில் நாம் பின் நிற்கக்கூடாது. இன்றைய அரசாங்கம் சகல உதவிகளையும் பனம் பொருள் உற்பத்திக்கு வழங்கவிருப்பதால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தீவுப்பகுதி மக்கள் பயனடையவேண்டும்.

வேலணை மத்திய மகாவித்தியாலயமண்டபத்தில்நடைபெற்ற கிராமமுன்னேற்றச் சங்கங்களின் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பொ. நடராசா இவ்வாறு கூறினார்.

திரு. நடராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:- தீவுப்பகுதியில் அதிகபனை மரங்களிருப்பதால் இம் மக்கள் அரசாங்கம் வழங்கவிருக்கும் பனை உற்பத்தி அபிவிருத்தி சம்பந்தமான உதவிகளை நிறையப் பெறவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் கடகம், பாய், வெங்காயக்கூடு போன்ற பொருட்களை இ... கள் உற்பத்தி ... லும் அதற்கா... வருவாயை அ... முடியவில்லை. ... ...படுத்துவ... ப... மக்கள் ... டம் அடைந்த ... ...மலிவான ... ...றை இவ... கூடியதாக வி... இனிமேல் இந்... இருக்க மாட்டா... பொருள் ஆரா... சாங்கம் நட... றது என்றார்.

பனம்பொருள்... மான அறிக்கை... தயாரிப்பதற்கா... கூட்டம் கூட்... இது பற்றிய அ... றையும் தீவுப்ப... திகாரி அரச... சமர்ப்பிக்கவிரு...

---

# தொழிலாளர் 27-வது மகாநாடு

கொழும்பு, ஞாயிறு லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியனின் 27-வது மகாநாடு பெப்ரவரிமாதம் 16, 17 திகதிகளில் நாவலப்பிட்டியில் நடைபெறவிருக்கிறது.

16-ந் திகதி செம்படையினர் மாநாடும், மாதர்களின் மாநாடும் நாவலப்பிட்டிய நகரசபைமண்டபத்தில் நடைபெறும்.

திரு. வி. எஸ். ராஜாவின் ''மங்கல ஓசை'' என்னும் நாடகம் அமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா தலைமையில் அன்றைய தினம் அரங்கேற்றப்படும். 17-ம் திகதி ''முல்லோயா கோவிந்தன்'' திடலில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்திற்கு கலாநிதி என். எம். பெரேரா தலைமைவகிப்பர்.

---

# ...என். ... ஆய்வுகூட... திறந்து...

யாழ்ப்பாண... சாவகச்சேரி ... ஹாரியின் புதி... கூடத்தை சா... விஜயம் செ... யமைச்சர் டாக்... எம். பெரேரா ... திறந்து வைக்கி...

சுமார் ஒன்ற... ரூபா செலவில் ... பட்ட இந்த ... துக்கு அரசாங்... யோடு பெற்றார்... பழைய மாணவ... கும் நிதியுதவி... னர்.

மேலும் விஞ்... கற்கும் மாண... தொகை அதிகரி... தால் இவ்வாய்வு... விஸ்தரிப்பதற்கு... கள் பெற்றார் ... எடுக்கப்படுவதா... கிறது.

## ...டேசர்

...தி உறுப்பினர்களைத்
...தெரிவு செய்வதுபற்றியும்
... கூட்டத்தில் ஆலோசிக்
...படும்.
...த்தி பல பேற்றும்
...தொழில் இன்றிக் கஷ்டப்
...ம் மாணவர்களின்
...மை- தற்போது கல்வி
...பயிலும் மாணவர்களுக்
... ஏற்படாவண்ணம் பாட
...லைகளில் மற்றைய பாடங்
...டன் வர்த்தகம், கைத்
...தொழில் ஆகிய தொழில்
...படக் கல்வியை ஆரம்ப
...ல் அவர்கள் கல்வி கற்
... கூடிய ஏற்பாடுகளைச்
...ய்யும்படி கல்வி அமைச்ச
...க் கேட்டுக்கொள்ள
...ண்டும் என்ற பிரே
...ணயை திரு எல். ஜே.
...ரனி கொண்டுவருவார்.
...திரு. அன்ரனி முன்னறி
...தல் கொடுத்துள்ள மற்
...ய பிரேரணை வருமாறு:
...ரின் சுகாதாரம், மின்சா
...ண்ணீர், வீதி வடிகால்
...கள் முதலியன யாவும்
...னித்து ஆவன செய்ய
...ண்டியபொறுப்பு மாந
...சபை உறுப்பினர்களுக்கு
...டயதால் விருப்பதால்
...மன்ற உறுப்பினர்க
...கு கொடுக்கப்படும் சம்
...ம், அலவன்ஸ், தபால்
...திகளில் சிலவற்றையா
... சகல நகராட்சி மாநக
...ட்சி மன்ற உறுப்பினர்க
...ம்வழங்க... வடிக்கை
...கும்படி ...ளூராட்சி
...மைச்சரைக் கேட்டுக்
...ள்வதென இம்மன்றம்
...மானிக்கிறது.

## ...க்களுக்கு ...டைக்கும்"

...ருட்கள் இப்பகுதி மக்
... உற்பத்தி செய்த போதி
... அதற்கான போதிய
...வாயை அவர்கள் பெற
...யவில்லை. அவற்றைச்சந்
...படுத்துவ... இப்
... மக்கள் ...வும் கஷ்
...் அடைந்து வந்துள்ள
... மலிவான ...லைக் கே
...றை இவ... விற்கக்
...யதாக விருந்துள்ளது.
...னிமேல் இந்தக் கஷ்டம்
...டுக்க மாட்டாது. பல
...ருள் ஆராய்ச்சியை அர
...ங்கம் நடாத்தவிருக்கி
... என்றார்.
...னம்பொருள் சம்பந்த
...ன அறிக்கை ஒன்றைத்
...ாரிப்பதற்காக இந்தக்
...டம் கூட்டப்பட்டது.
...து பற்றிய அறிக்கை ஒன்
...றயும் தீவுப்பகுதிகாரியா
...ரி அரசாங்கத்திடம்
...ர்ப்பிக்கவிருக்கிறார்.
(கு வி ம)

—

## ...என். ...ம். ஆய்வுகூடத்தை திறந்துவைப்பார்

யாழ்ப்பாணம், திங்கள்
... சாவகச்சேரி இந்துக்கல்
...ரியின் புதிய ஆய்வு
...டத்தை சாவகச்சேரிக்கு
...ஜயம் செய்யும் நிதி
...மைச்சர் டாக்டர் என்.
...ம். பெரேரா இன்று
...றந்து வைக்கிறார்.
... சுமார் ஒன்றரை லட்சம்
...பா செலவில் அமைக்கப்
...ட்ட இந்த ஆய்வு கூடத்
...க்கு அரசாங்க உதவி
...யாடு பெற்றோர், ஆசிரியர்
...ழைய மாணவர் ஆகியோ
...ம் நிதியுதவியளித்துள்ள
...ர்.
...மேலும் விஞ்ஞானக் கல்வி
...ற்கும் மாணவர்கள்
...தொகை அதிகரித்து வருவ
...தால் இவ்வாய்வு கூடத்தை
...விஸ்தரிப்பதற்கும் முயற்சி
...கள் பெற்றோர் ஆசிரியரால்
...எடுக்கப்படுவதாகத் தெரி
...கிறது. (கு. வி. ம)

## 'மலையக மக்களின் போராட்டம் இனிமேல்தான்'

ருவலை, ஞாயிறு

''நாட்டிற்குசெல்வத்தைத் தேடித்தந்த இந்தநாட்டையே உய்யவைக்கும் தனிப்பெரும் தியாகிகளாகிய தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை வழங்க அரசாங்கம் மறுத்தால் போராட்டத்தின் மூலம் எமது உரிமைகளைப் பெற எனது இனத்தைத் தட்டி எழுப்பதயாராக இருக்கின்றேன். மலையக மக்களை மந்தைகளென நினைத்து மிருகத்தனமாக எத்த நபரும் அரசும் நடத்த முயன்றால் போர்க்களத்தை நோக்கி வீறுநடைபோட ஆயிரமாயிரம் திராவிடக் காளைகள் 'மலையகத்தில் மார்புதட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பகிரங்கப்படுத்தக் கடமைப் பட்டுள்ளேன்''

லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் பொதுக் கூட்டம் ருவலையில் நடந்தபொழுது யூனியன் செயலாளர் திரு. வி. எஸ். ராஜா மேற்கண்டவாறு கூறினார். கூட்டத்திற்கு யூனியன் பிரதிநிதி திரு. எம். டி. சோமசுந்தரம் தலைமைவகித்தார். திரு. ராஜா தொடர்ந்து பேசும்பொழுது கூறியதாவது:-

''வளர்ந்துவரும் தொழிலாளர்களின் சக்தியை துப்பாக்கி முனையில் சரணடையச் செய்துவிடலாமென பிற்போக்கு சக்திகள் கருதுகின்றன. நாம் இதை அரசுக்கும் தெரியப்படுத்தியும் எந்தவித பயனையும் காணவில்லை. இந்த அநியாயம் தொடருமென்றால் மலையகமக்கள் பிற்போக்குச் சக்திகளின் அநியாயத்தை எதிர்த்துப்போராட பின்வாங்கமாட்டார்கள்.''

## அச்சுத் தொழிலாளருக்கு சம்பளம் உயர்கிறது!

கோட்டை, ஞாயிறு

இருபதினாயிரம் அச்சுத் தொழிலாளர் வாழ்வில் இருபத்தைந்து வருட காலத்தின் பின்னர் விடிவு காலம் ஏற்பட்டுள்ளது. அடுத்த மாதம் 1-ம் திகதி முதல் கூடிய சம்பளத்தை இவர்கள் பெறவிருக்கிறார்கள். 12 ரூபாவுக்கும் 20 ரூபாவுக்குமிடையில் சம்பள உயர்வு இவர்களுக்கு கிடைக்கவிருக்கிறது.

தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு அமைய சம்பளத் திட்டத்தை மாற்றி அமைக்கும்படி தொழில் அமைச்சர் திரு. மைக்கேல் சிறிவர்த்தன விடுத்த கோரிக்கையை ஏற்று சம்பள நிர்ணய சபை மேற்படிமுடிவை எடுத்துள்ளது.

''ஏ'' தரத்திலுள்ள அச்சுத் தொழிலாளருக்கு ரூ 109-99 லிருந்து ரூபா 121-18 ஆகவும், ''பி'' தரத்திலுள்ளவர்களுக்கு ரூ. 84-63 லிருந்து ரூ. 109-99 ஆகவும், ''சி'' தரத்திலுள்ளவர்களுக்கு ரூ. 69-08 லிருந்து ரூ. 84-63 ஆகவும் அதிகரிக்கிறது.

## தொழிற்சங்க 6-வது மாநாடு

யாழ்ப்பாணம், திங்கள்

அரசாங்க பொதுசேவை தொழிற்சங்க சம்மேளனத்தின் 6-வது ஆண்டுவிழா இம்மாதம் 31-ம் திகதியும் பெப்ருவரிமாதம் முதலாம் திகதியும் கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இதில் மேற்படிசங்க யாழ் கிளையிலிருந்து 30 அங்கத்தவர்கள் கலந்துகொள்ளுவர். (கு. வி. ம.)

## ரயில் டிக்கட் இல்லை ஒருவாரச் சிறை

குருநாகல், ஞாயிறு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த புகைவண்டியில் பொல்காவல வரைக்கும் ரிக்கெற் இல்லாமல் பிரயாணம்செய்த வவனியாவைச் சேர்ந்த ஒருவருக்கு குருநாகல் மாஜிஸ்திரேட் ஒரு வாரச் சிறைத் தண்டனை விதித்தார்.

குருநாகல் மாஜிஸ்திரேட் திரு எம். ஒ. எம். தாஹிர் 10ரூபா அபராதம் செலுத்தும்படி தீர்ப்பளித்தார். மேற்படி நபர் அபராதம் செலுத்த இயலாததனால் ஒருவாரச் சிறைவாசம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

......

## 'எண்ணெய்உண்ணும்' கிருமிகள் கண்டுபிடிப்பு

லெனின்கிராட, ஜன 24

எண்ணெய், எண்ணெய் பண்டங்கள் முதலியவற்றை உண்டு சீவிக்கும் நுண்ணிய கிருமிகளை சோவியத்ஜீவ இயல் சாஸ்திரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

நீரை அசுத்தப்படுத்தும் எண்ணெய்ப் பொருட்கள் மீது 'பேரர்' தொடுக்க இக்கண்டுபிடிப்பு பேருதவியாக அமையும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

'எண்ணெய் உண்ணும் இககிருமிகள் பின்லாந்து விரிகுடா, கருங்கடல், இந்து மகாசமுத்திரம் முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

......

## ''அமைதியை ஏற்படுத்தும் பண்ணிசை''

தாவடி, சனி

'சிற்றாறுகள் சலசலப்புடன் பாய்கின்றன; ஆனால் ஆழ்ந்து, அகன்றுள்ள கங்கைபாய் கின்றபோது அமைதியும் இன்பமும் காணும் வகையில் பாய்கின்றது, இன்று இங்கு நடைபெற்ற பண்ணிசைக்கச்சேரியும் இது போன்றதே. மக்களின் மனதிலே அமைதியையும், ஆனந்தத்தையும் பக்திரசத்துடன் இசை ரசனையையும் அளித்துள்ளது. இவர் போன்ற கலைஞர்களைப் போற்றிப் பாராட்டி தெய்வீக மணம் கமழும் திருமுறைகளை மேலும் வளர்த்தல் சிறப்புடையதாகும்.

இவ்வாறு வியாகரண சிரோமணி பிரமஸ்ரீ ரி. கே. சீதாராம சாஸ்திரிகள் உடுவில் முருகமூர்த்தி ஆலயத்தில் நடந்த விழாவின்போது பண்ணிசைக்கச்சேரி நிகழ்த்திய திரு. எஸ். இராசையாவைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

— —

## தமிழ் பிரிவு மூடப்பட்டது

இரத்தினபுரி, ஞாயிறு

இரத்தினபுரி ஸ்ரீ சுமன வித்தியாலயத்தில் தமிழ் பிரிவு மூடப்பட்டுள்ளது. 6-ம் வகுப்புத் தொடக்கம் 9-ம் வகுப்புவரை இயங்கி வந்த தமிழ்ப் பிரிவு படிப்படியாக மூடப்பட்டு வந்தது, இம்மாதம் 20-ம் திகதியுடன் முற்றாக மூடப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள தமிழ் மாணவர்கள் வேறு பாடசாலைகளில் இடம்தேடி அலைகின்றனர்.

......

## நடனவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். உயர்கலைக் கல்லூரியினரின் கவின்கலைப் பகுதியினர் அளிக்கும் நாடக நடனவிழா இன்று மாலை யாழ். வீரசிங்கம்மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (கு. வி. ம.)

## கொரியாவுக்கு 7000தொன்றப்பர்

கோட்டை, ஞாயிறு

இலங்கையிடமிருந்து 7000 தொன் றப்பரை வாங்குவதற்கு வடகொரியா உடன்பாடு தெரிவித்துள்ளது.

இதற்கான ஒப்பந்த நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்வொப்பந்தத்துக்கான நடவடிக்கைகளைச் சமீபத்தில் ...ரியாவுக்கு விஜயம் செய்திருந்த உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் மேற்கொண்டிருந்தார்.

......

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

நாவலர் கந்தபுராண கலாசார சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 26-ந் திகதி நல்லூர்ஞான சம்பந்த ஆதீனத்தில் சிறப்பாக நடைபெறும்.

— —

## ஆசிரியசங்க பேச்சு,இசைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

ஆண்டுதோறும் வடமாகாண ஆசிரியர் சங்கம்-கல்விச்சபை நடாத்தி வரும் பேச்சு, இசை, கட்டுரைப் போட்டிகள் வருகிற மாதம் 19ம்திகதியும், மார்ச் 10ம் 11ம் திகதிகளிலும் நடைபெற விருக்கிறது.

இதில் பங்கு கொள்ள விரும்பும் பாடசாலைகள் பெப்ரவரி மாதம் 7ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் என்றும்கிளைச்சங்கங்கள் நடாத்தும் போட்டிகள் பெப்ரவரி 24ம் திகதிக்கு முன்னர் நடைபெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

## சுற்றுலா

தாவடி, திங்கள்

கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலை மாணவ-மாணவிகள் இன்று தலைமையாசிரியர் திரு. த. தருமலிங்கம் தலைமையில் சுற்றுப் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

அனையிறவு, பரந்தன், அநுராதபுரம், மிகுந்தலை ஆகிய இடங்களுக்கு இவர்கள்செல்வர்.

......

## தபால் ஊழியா 24 வது மாநாடு

தாவடி, ஞாயிறு

அகில இலங்கை தபால்-தந்தி ஊழியர் சங்கத்தின் 24-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் பெப்ரவரி மாதம் 23ம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவிருக்கிறது.

இதில் பங்கு பற்றவிரும்பும் வடகிளையின் அங்கத்தவர்களை பெப்ரவரி 1ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி மேற்படி சங்கத்தின் வட-கிளையின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

......

தேயிலை உற்பத்தி

## ரூ. 1 கோடியால் வீழ்ச்சி

கோட்டை, ஞாயிறு

1970-ம் ஆண்டில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக புள்ளி விபரம் ஒன்று கூறுகிறது.

1969-ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1970-ம் ஆண்டில் ஒரு கோடி 70 லட்சம் இருத்தலால் உற்பத்தி குறைந்திருக்கிறது. கடந்த 9 ஆண்டுகளில் 1970-ம் ஆண்டில்மட்டுமே உற்பத்தி வெகுவாகக் குறைந்துள்ளதாம்.

# ஊர்வசி நாட்டிய நாடகம் ஒரு கண்ணோட்டம்

பூலோகத்தில் பூம்பந்தாடுகிறாள் பாவை ஒருத்தி. அவள்தான் இந்திரலோக ஆடல் அரசி ஊர்வசி. அவளுடன் சேர்ந்து ஆடும் அப்சரஸ்கள் தெய்வலோகத்திலிருந்து நேரே இங்கு வந்தார்களோ என ஐயுறக் கூடிய காட்சியுடன் ஆரம்பமாகிறது.

ஆடிப்பாடும் அழகியின் சரியல்ல் அரக்கன் ஒருவன் மயங்குகிறான். அவன் கோணத்திற்கு கோணம் நின்று ஊர்வசியின் அழகை ரசிப்பதும் தன் தோற்றத்தில் ஊர்வசி லயிக்கவேண்டும் என்று ஆண்மையுடன் ஆசை நடைபோடும் சுசிலர பரராஜசிங்கத்திற்கு நாட்டியத்தில் நல்ல அனுபவம் உண்டென்பதை நிரூபிக்கின்றது.

அரக்கன் ஊர்வசியை கவர்ந்து செல்லும் பொழுது அனுதரவான தோழிகளின் அவலக்குரல் கேட்பவர் எவரையும் அபயமளிக்கத் தூண்டும். தக்க சமயத்தில் இளமையுடன் ஆண்மை பொலியும் இளவரசர் புரூருவன் அபயமளித்து, அரக்கனின் கோரப் பிடியிலிருந்து ஊர்வசியை மீட்பது உற்சாகமளிக்கும்.

நன்றிக்கடனாக பரஸ்பர காதல் மலருவது மனோரம்மியமானது.

இந்திரன் சபையில் ஊர்வசி இலக்குமி சுயம்வரம் ஆடுகிறாள். சுயம்வரம் ஆரம்பமாகுமுன் கோலப் பெண்கள் கோலமிட்டு பூரணகும்பம் பொலிவுற வைப்பதும், தோரணம் தூக்கி ஆரணங்குகள் அலங்கரிப்பதும் அலாதி.

சுயம்வரமண்டபத்திற்கு இலக்குமியாக ஊர்வசியை (ரஞ்சனி ராஜரத்தினம்) அழைத்துவருவது கண்கொள்ளாக்காட்சி.

இலக்குமிக்கு தோழிகள் திருமாலின் நாம உருவ வேட்பாளர்களை அறிமுகம் செய்வது தனிச்சிறப்பு. புருஷோத்தமன் நாமம் பூலோகத்தில் சந்தித்த புரூருவனின் நினைவூட்டியதும் ஊர்வசியின் முகபாவ-சிருங்கார-அபிநயம் நடனக்கலையில் கைவந்த நடிகர்களிடமே காணமுடியும்.

தினைவின் வேதனையால் ஆட்டத்தில் ஏற்பட்ட தவறைக்கவனித்த பரதமுனிவர் ஊர்வசி பூலோகம் செல்லச் சாபமிடுதல் மயிர் சிலிர்க்கும்.

சாபத்திற்கு அஞ்சிப் பயந்து ஊர்வசி இன்னும் சோகமாய் மதறி இந்திரனிடம் விமோசன வழி பெற்றிருக்கலாம்.

பூலோகம்வந்த ஊர்வசி புரூருவருடன் இயற்கைக் காட்சிகளை கண்டு களி நடமிட்டு சௌபனியம் காண்பது இன்பமானது.

புரூருவன் பரவிருப்பம் கொண்டான் என ஊர்வசி பிரிந்து வாழும் பிரிவை தாங்கமுடியாது புரூருவன் தூதுவிடுவதும் நன்று.

பிரிந்தவர் கூடுவது கிடைத்தற்கரியபேறு.

சியவண முனிவரின் குருகுலத்தில் வளர்ந்த ஊர்வசியின் மகன் ஆயு. வில், வாள் ஆதியாம் எல்லா வித்தைகளையும் கற்கும்முறை சிறுவர்களை பின்பற்றவைக்கும்.

தங்கள் ஆபரணங்களை கழற்றிக்கரையில் வைத்துவிட்டு ஊர்வசியும் புரூரும் சலக்கிரீடை செய்யும் பொழுது புள்ளினம் ஒன்று கிடைத்தற்கரிய சங்கமணி என்னும் அவர்களின் ஆபரணத்தை எடுத்துச் செல்வதைக்கண்ட புரூருவன் தன் அம்பால் அதனை எய்ய ''புரூருவ ஊர்வசி மகன் ஆயு'' என பொறிக்கப்பெற்ற அம்புடன் காலடியில் புள்ளினம் விழுவது கலக்கத்தை உண்டுபண்ணும்.

கலக்கத்தை உண்டுபண்ணும் ஊர்வசி தன் சொந்தப்பிள்ளையையும் புரூருவனுக்கு அறிமுகப்படுத்தியவுடனேயே புரூருவனையும் பிள்ளையையும் பிரிந்து இந்திரலோகம்செல்லும் விமோசனம் கிட்டிவிடும் என்றும் பயத்தாலேயே சொல்லாது மறைத்து வைத்திருந்தாள் என நாரதர் புரூருவன் அறியச் சொல்வது வியப்பாகும். ஊர்வசி சொல்லொணாத் துயருடன் பிரிந்து செல்வது கல்நெஞ்சும் தாங்கமுடியாத பிரிவு.

இத்தனை காட்சிகளையும் காணவிரும்புவோர் இம்மாதம் 26, 27-ம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி புதிதாய் அமைத்த தம்பையா மண்டபத்தில் மேடையேறும் ஊர்வசியைக் காணலாம்.

—சித்திரகலா

# 'ஊழியர்கள் வேலையைச் செய்யாமலிருப்பது குற்றம்'

-- வர்த்தக அமைச்சர்

கோட்டை, திங்கள்

பொதுமக்களிடமிருந்து பெறப்படும்பணத்திலிருந்து ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு ஊதியத்துக்கான வேலையைச் செய்யாமல், நேரத்தை வீணாக்கழிக்கும் ஊழியர்கள்நாட்டின்பெரும் துரோகிகளாவார்கள் அத்துடன் அது பாரதூரமான குற்றமுமாகும் என்று உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி பி இலங்கரத்தின எச்சரிக்கை விடுத்துள்ளார்

கண்டி - திருமலைவீதியில் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்துக்கு திடீர் விஜயம் செய்த அமைச்சர் இலங்கரத்தின அங்கிருந்த ஊழியர்களை கடுமையாக நோக்கி இவ்விதம் கூறினார்.

மேற்படி நிறுவனம் துப்புரவின்றி அழுக்குப்படிந்திருத்தலைக் கண்ணுற்ற அமைச்சர் கோபமடைந்து அங்குள்ள கண்ணாடி அலுமாரியைத்தனதுவிரல்களால் துடைத்து அதில் காணப்பட்ட அழுக்கை ஊழியர்களுக்கு காட்டி 'இவ்வாறு தான் நீங்கள் வேலைசெய்கிறீர்களா' எனக்கடுமையாக வினவினார்

அமைச்சர் மேலும் கண்டியிலுள்ள மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனங்களுக்கும் சென்று அங்குள்ள குறைபாடுகளைக் கவனித்தார்

— —

## பல்கலைக்கழக மாணவரின் சினிமாச் சங்கம்

கோட்டை, ஞாயிறு

சினிமா சங்கம் என்ற தொரு சங்கத்தை பல்கலைக்கழக மாணவ மாணவிகள் அமைத்துள்ளனர்.

— —

## பட்டதாரிகளுக்கு புதிய வேலைவாய்ப்பு

கோட்டை, ஞாயிறு

பட்டதாரிகளுக்கு பயிர் செய்கைக் குழுக்களில்வேலை வாய்ப்பளிக்க அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

10 அல்லது 15 குழுக்களுக்கு மேற்பார்வையாளராக ஒரு பட்டதாரி நியமிக்கப்படுவார்.

கம்போடியாவில்

# அவசரகால நிலைமை

நாம்பென், ஜன. 24 கம்போடியத் தலைநகரான நாம்பென்னில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகவலை கம்போடியாவின் அதிபர் அறிவித்தார்.

கடந்த சில நாட்களாக அரசாங்க எதிர்ப்புப் படைகளும், வியட்காங்கியரும் தலைநகரைக் கடுமையாகத் தாக்கினர். அவர்களின் தாக்குதலை முறியடிப்பதற்காக நகரில் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதோடு புதிய ராணுவப் பிரிவும் தலைநகரில் நிலைகொண்டுள்ளது.

அரசாங்க எதிர்ப்புப் படைகளின் கையில் இருந்த காம்பென் ஷென் பகுதியிலிருந்து வியட்காங்கியரை முற்றாகத் துரத்திவிட்டதாக அரசாங்கத்தின் செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சண்டையில் 30 பேர் கொல்லப்பட்டனர். 180 பேர் காயமடைந்தனர். 2 அமெரிக்க ஹெலிகொப்டர்கள் வியட்காங்கியரால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

# தொண்டமாறு நந்நீர் திட்டத்தின் பயன்

பருத்தித்துறை, ஞாயிறு "தொண்டமாறு நன்னீர் ஏரித்திட்டமூலம் இப்பகுதியில் ஏராளமான பருத்தி, மரமுந்திரிகை, நெல் ஆகியன உற்பத்தி செய்யலாம் இதுவரை வடபகுதி நீரியல் உயிரியல் சபையினர் செய்த ஆராய்ச்சிகளின் படியும், புள்ளிவிபரப்படியும் அபரிமிதமான பருத்தி இங்கிருந்து ஏற்றுமதி செய்யமுடியும். இக்கருத்தை அகில இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கமும் அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த கலாநிதி சிறில் பொன்னம்பெருமாவும், இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் ஏற்றுள்ளனர்.'

இவ்வாறு வடபகுதி நீரியல், உயிரியல் ஆய்வுச்சபையின் உருவாக்குநர் திரு கே. எஸ். குகதாசன், கைத்தொழில், விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு ரி. பி. சுபசிங்காவுக்கு அனுப்பியுள்ள 72 பக்க அச்சிடப்பட்ட மகஜர் ஒன்றில் கூறியுள்ளார். மகஜர் மேலும் கூறுவதாவது:- "இந் நன்னீர் ஏரித்திட்டத்தை விஸ்தரித்து மேலும் பல புதிய வகையினவான மீனினங்களைச் சேர்த்தால் மீன் உற்பத்தியும் பெருக வசதியேற்படும். அரசாங்க உதவி கிடைத்தால் நாம் ஒரு சாதனையை நிலைநாட்டலாமென்ற துணிவும் நம்பிக்கையும் எமக்குண்டு.

# 'கலாச்சார விழாக்கள் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும்'

கொழும்பு, ஞாயிறு கணக்காய்வுத் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கொழும்பு தேயிலைப் பிரச்சார சபையின் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வாரம்பவிழாவினை கணக்காய்வுத் திணைக்களத் தலைமை அதிபதி டி. ஆர். செட்டிநாயக்கா தொடக்கி வைத்து ஆரம்பஉரை நிகழ்த்தினார்.

தமது உரையில் திரு. செட்டிநாயக்கா தெரிவித்ததாவது:-

உலகரீதியான மொழிகளாகக் கணிக்கப்படும் மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று. அதன்வளர்ச்சிக்காக இம்மன்றம் சேவையாற்றுவது மிகப்பொருத்தம். கலாச்சார விழாக்களை நடாத்துவதன்மூலம் தமிழ் மொழியின் பெருமையை மற்றவர்களும் அறிந்துணர்ந்து உரியமதிப்பளிப்பதன்மூலம் தேசியஒற்றுமைக்கு வழிவகுக்கும்.

நிர்வாகஉறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர் திரு. டி. ஆர். செட்டிநாயக்கா, தலைவர்: திரு. ஆ. குணநாயகம், துணைத்தலைவர்கள் திருவாளர்கள்: ரீ. முத்தையா, கே. சண்முகதாசன். செயலாளர் திரு. எஸ். பத்மநாதன், துணைச் செயலாளர்: திரு. இளலிங்கம், பொருளாளர்: திரு. கே. குகதாசன். நூலகர்: திரு. எல். சிவகுரு. துணைநூலகர்: திரு. எஸ். ஆர். ஜேசுதாசன் இதழாசிரியர்: திரு. தி. இராசநாயகம். துணைஇதழாசிரியர் திரு. மு. மகேஸ்வரன்.

நான்கு பேர் கொண்ட செயற்குழு ஒன்றும்தெரிவு செய்யப்பட்டது.

## பௌத்த காங்கிரஸ் கூடுகிறது

கோட்டை, ஞாயிறு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் இம் மாதம் 27-ம் திகதி அரசியல் திட்ட அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவினால் அரசியல் திட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ள இலங்கையில் பௌத்தத்தின் நிலைபற்றிய அடிப்படைத்தீர்மானங்கள் பற்றி ஆராய்வதற்கு கூடுகிறது.

இலங்கையில் பௌத்த மதத்தை அரசாங்க மதமாகப் பிரகடனப்படுத்துவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனமேற்படி காங்கிரஸின் தலைவர் டாக்டர் மலலசேகரா தெரிவித்துள்ளார்.

## கிழ: ஜெர்மன் உதவும்

கோட்டை, ஞாயிறு நாட்டின் சுகாதார நலனுக்கு ஜெர்மன் ஜனநாயக குடியரசு உதவ முன்வந்துள்ளது. நெருப்புக்காய்ச்சல், ஏற்புவலி போன்ற நோய்களால் ஏராளமான குழந்தைகள் பாதிக்கப்பட்டு வருவதைத் தடுக்கும் முகமாக சோஷலிஸ நாடுகளிடமிருந்து இலங்கை உதவிகோரி வந்துள்ளது.

## பிரியாவிடை

மாவிட்டபுரம், ஞாயிறு பழை வீமன்காமம் கிராம சேவையாளராகக் கடமையாற்றிய திரு க. வேலும்மயிலும் சுன்னாகம் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து பழை வீமன்காமம் மக்கள் வீமன்காமம் இளைஞர் மன்ற மண்டபத்தில் பிரியாவிடை நடாத்தினார்கள்.

இவ் வைபவத்தில் வலி-வடக்கு காரியாதிகாரி பி. எல். பற்றிக்ஸ், பண்ணைதல் கம்மா அப்பாக்குட்டி உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

## 'செயல் வீரர்'

உரும்பராய், ஞாயிறு வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் உன்னத வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்களில் ஒருவரே இறைவனடி சேர்ந்துள்ள ஆசிரியர் திரு. துரைசிங்கம். உண்மையான தொழிற்சங்கவாதிக்குரிய எல்லாவித குணநலன்களும் ஒருங்கு அமையப் பெற்றவராய் இருந்த இவர் தமது கிராமமாகிய வசாவிளான் ரோமன் கத்தோலிக்க பாடசாலையின் வளர்ச்சிக்கு நல்ல வழிகாட்டியாயிருந்தார். இப்படியானதொரு சிறந்த செயல்வீரரை நாம் காண்பது அரிது. பெரிய காரியங்களையெல்லாம் குறுகியவயதினுள்ளே செய்துமுடித்த ஆசிரியர் திரு துரைசிங்கத்தின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை ஆசிரியர்கள் சார்பில் தெரிவிக்கின்றேன்''

வலிகிழக்குத் தமிழாசிரியர் சங்கம் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கங்களின் தனாதிகாரியாகவும் பிரதான நிர்வாகியாயும் கடமையாற்றி அகால மரணமடைந்த வசாவிளான் ரோமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர் திரு. இ. துரைசிங்கத்தினது இறுதிச் சடங்கு அஞ்சலிநிகழ்ச்சியில் உரையாற்றிய வடஇலங்கைத் தமிழாசிரியர்சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

......

# இடமாற்றம்

அநுராதபுரம், ஞாயிறு அநுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு பொ. சங்கரப்பிள்ளை அடுத்தமாதம் முதல் உடுத்துறை செம்பியன்பற்று வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் பதுளை பண்டாரவளை ஆகிய இடங்களிலும் ஆசிரியராக சேவையாற்றியுள்ளார்.

0 0 0

வெள்ளவத்தை, ஞாயிறு கொழும்பு பிரதம தபாற்கந்தோரில் காசுக்கணக்கிட்டுக் கிளையில் கடமையாற்றிய திரு கே. சிவானந்தன் பேலிவீதியிலுள்ள சம்பள முற்பண வழங்கல்கள், பிரயாணச் செலவுக் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

கொழும்பு தலைமை அஞ்சலக பொதிகள் கிளையில் கடமையாற்றிய திரு அ. யேசுராசா (குருநகரோன்) பசறை தபால் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

......

யூகோஸ்லாவியாவில்

## நாணயப் பெறுமதி குறைப்பு

பெல்கிரேட், ஜன. 24 யூகோஸ்லாவியா நாடு நாணயத்தின் பெறுமதியைக் குறைத்துள்ளது. நாணயப் பெறுமதிக் குறைப்பு இன்று அறிவிக்கப்பட்டது. வாழ்க்கைத்தரத்தை சீர்படுத்துவதற்காகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யூகோஸ்லவிய நாணயத்தின் பெறுமதியை ஓர் அமெரிக்க டாலர் வீதம் குறைக்கப்பட்டுள்ளது.

இந் நாணயக் குறைப்பை வாஷிங்டன் நாணயசபை ஏற்றுக்கொண்டுள்ளது.

ஹோமஹம வங்கிக் கொள்ளை:

# இவர்களை பற்றி தகவல் கொடுத்தால் ரூ.10,000!

கோட்டை, ஞாயிறு ஹோமஹம மக்கள் வங்கி 5 லட்சம் ரூபாய் கொள்ளை சம்பந்தமாக பொலிஸ் மேலும் இருவரைத் தேடுகிறார்கள். இவர்கள் பற்றி தகவல்கொடுப்போருக்கு பத்தாயிரம் ரூபாய் சன்மானம் வழங்க மக்கள் வங்கி முன்வந்துள்ளது.

மகரஹமவைச் சேர்ந்த தேவசுந்தர சர்மதாசா என்பவர் பொலிஸாரால் தேடப்படும் ஒருவர். 40 வயதான இவர் சைக்கிள் கடையொன்றை மகரகமவில் நடத்திக்கொண்டிருந்தவர். உயரம் 5 அடி 7 அங்குலம் பலாங்கொடையில் திருமணம் செய்தவர்.

பொலிசாரால் தேடப்படும் மற்றவர் நுகே கொடை - ரத்மலானை வீதியில் வசிக்கும் 30 வயதான ஜெயதேவா கெட்டியாராச்சி ஆவார். 5 அடி 3 அங்குல உயரமான இவர் திருமணமானவர்.

## பூட்டோ ரஹ்மானைச் சந்திப்பார்

கராச்சி, ஜன. 24 பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும்முன்னாள்பாதுகாப்பு அமைச்சருமான திரு. அலி பூட்டோ முஸ்லிம் லீக் தலைவர் திரு. முஜிபர் ரஹ்மானைச் சந்திப்பதற்காக இம்மாதம் 27ந் திகதி கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவிற்குச் செல்லவிருக்கிறார்.

திரு ரஹ்மானுடன் புதிய அரசியல் திட்டம் பற்றியும், தேசியப் பிரச்சினைகள் பற்றியும் திரு. பூட்டோ பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரியவருகிறது.

## தாஷ்கண்டில் சாஸ்திரிக்கு அஞ்சலி

தாஷ்கண்ட், ஜன. 24 காலஞ்சென்ற பாரதப்பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் நினைவுக்கு தாஷ்கண்ட் மக்கள் அஞ்சலி செலுத்தினர். காலஞ்சென்ற சாஸ்திரி தாஷ்கண்ட் மகாநாட்டின் போது தங்கியிருந்த இல்லத்தில் நகர மக்களின் பிரதிநிதிகள்கூடினர்.

உஸ்பெக் பிரதமர் ரஹ்மான் குல் குர்பானோவும், உஸ்பெக்குடியரசின் இதர ராஜியவாதிகளும். சோவியத்-இந்திய கலாசார உறவுக் கழகத்தின் உஸ்பெக்கிளையின் ஊழியர்களும், பத்திரிகையாளர்களும், இக் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

லால்பகதூர்சாஸ்திரி காலமான வீட்டில் ஒரு மலர்வளையம் சாத்தப்பட்டது 'சோவியத் பிரதமர் ஏ. என். கோஸிஜினிடமிருந்து தலைசிறந்த இந்திய ராஜியவாதி லால் பகதூர் சாஸ்திரிக்கு' என்று எழுதப்பட்டிருந்தது அதற்கு அடுத்தாற்போல் உஸ்பெக் அரசாங்கத்தின் மலர்வளையம் இருந்தது அங்கு நிறுத்தப்பட்டிருந்த சோவியத் ராணுவ வீரர்கள் குழு. கௌரவ அஞ்சலி செலுத்தியது.

## "மதநெறி மனதை தூய்மையாக்கும்"

உடுப்பிட்டி, ஞாயிறு "மதநெறியே மனத்தைத் தூய்மைபடுத்துவது. சுவாமி விவேகானந்தர் சுபீட்ச வாழ்விற்குக் காட்டும் மார்க்கம் இதுவே.'

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீசாரதா நிலைய சேவாச்சிரமத்தில் சுவாமி விவேகானந்தரின் 109 வது பிறந்ததான் திதி பூஜை விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் சேவாச்சிரமப் பொதுச் செயலாளர் பிர. இரத்தினசபாபதி குறிப்பிட்டார்.

24ம் திகதி வரையும் விசேட பூஜை, பஜனை, ஆராதனை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பாடசாலை

## அதிபர்களுக்கு மேலும் ஒரு தர உயர்வு

கோட்டை, திங்கள் பாடசாலை அதிபர்களுக்கு 5-ம்தர உயர்வொன்றை கல்வியமைச்சு கொண்டுவந்துள்ளது.

இந்த 5வது தர உயர்வு உயர்தர அதிபர்களுக்கு மேலும் ஒரு உயர்வை அடைவதற்கு வாய்ப்பளிக்கிறது

இவ்வாறு பாடசாலை அதிபர்களுக்கு கொண்டுவரப்பட்ட இந்த உயர்வு அவர்களை பாடசாலை இன்ஸ்பெக்டர் தரத்தையடைவதற்கு முயற்சிப்பதிலிருந்து தடைவிதிக்கும் எனக் கல்வியமைச்சு கருதுகிறது தற்போது பாடசாலை உயர்தர அதிபர்கள் தமது தரத்திற்கு அடுத்து வேறுஒன்று இல்லாததால் பாடசாலை இன்ஸ்பெக்டர் பதவியையே யடுத்ததாக நாடுகிறார்கள் எனவும் அமைச்சு அறிவித்துள்ளது

திரு. சங்கரலிங்கத்திற்கு

## சேவை நலம் பாராட்டத் தீர்மானம்

மாவிட்டபுரம், ஞாயிறு இளைப்பாறிய வடமாநில வித்தியாதிபதி திரு வெ. சங்கரலிங்கத்திற்கு சேவை நலம் பாராட்டு விழா ஒன்றை சிறப்பாக நடத்துவதென அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்க வடமாநிலக் கூட்டுச்சபை முடிவு செய்துள்ளது

மேற்படி சபையின் விசேட கூட்டமொன்று திரு வ. மகாலிங்கம் தலைமையில் யாழ் நாவலர் பாடசாலையில் நடைபெற்றபோது இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் பின்வருமாறு:

'வெளி மாகாணங்களிலிருந்து வடமாகாணத்திற்கு இடம் மாறிவரும் ஆசிரியர்களுக்கு வடமாநிலத்தில் இன்னும் இடங்கள் குறிப்பிட்டு மாற்றக் கட்டளைகள் பிறப்பிக்காததையிட்டு சங்கம் கவலை தெரிவிப்பதுடன் அதைத் துரிதப்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும்

கிளைச் சங்கங்களின் நிர்வாகிகளின் மாற்றங்களைத் தடை செய்யும் முயற்சிகளைக் கண்டிப்பது 'நீதி நேர்மையுடனும் கண்ணியத்துடனும் செயலாற்றும் பொதுக் காரியதரிசி மீது சுமத்தப்படும் அபாண்டங்களை வன்மையாகக் கண்டிப்பது'.

# கோர்ட்டுக்குப் போனவர் கடலில் இறந்து கிடந்தார்

எழுதுமட்டுவாள், ஞாயிறு
கைதடி பரவைக்கடலில் சின்னப்பு சுப்பிரமணியம் (வயது 60) என்பவர்நேற்று முன்தினம் இறந்துகிடக்கக் காணப்பட்டார். இவரது மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி சடலத்தை புதைக்கும்படி உத்தரவிட்டார்.

இறந்தவரின் மனைவி சுப்பிரமணியம் சின்னம்மா சாட்சியமளிக்கையில் தமக்கும் கணவருக்குமிடையே எதுவித சச்சரவும் இருக்கவில்லை என்றும் சம்பவதினம் தங்கள் மகன் கணேசனுக்கும் வேலம்பிராயைச் சேர்ந்த ஐயன் கந்தனுக்குமிடையே இருக்கும் வழக்கையொட்டி சாவகச்சேரி நீதிமன்றத்துக்குச் சென்ற தமது கணவர் திரும்பிவரவில்லை என்றும் ஆனால் இவரது மரணம் சம்பந்தமாக எவர்மீதும் தமக்கு சந்தேகம் இல்லை என்றும் தெரிவித்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. கே. கதிர்காமசேகரம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்து டாக்டர் ரி. சிவராசசிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினார். மரணத்துக்குரிய காரணம் எதுவும் தெரிவிக்க முடியவில்லை என்றும் உடலில் இறப்பு நேரிடக்கூடிய காயங்கள் இல்லையென்றும் அவர் சாட்சியமளித்தார்.

கைதடி கிராமசபைத்தலைவர் இம்மரணத்திலதமக்குச் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி சடலத்தை புதைக்கும்படி உத்தரவிட்டார்.

# வல்வெட்டித்துறை அபிவிருத்திக்கு நடவடிக்கை

வல்வெட்டித்துறை, ஞாயிறு
வல்வெட்டித்துறை நகரசபையின் புதிய தலைவர் திரு. நவரத்தினம் நகரின் அபிவிருத்திக்கும், சீர்திருத்தத்துக்கும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். பொதுமக்களின் ஒத்துழைப்பையும் அவர் கோரியுள்ளார்.

பட்டினசபையாக இருந்து நகரசபையானதால் நான்கு புதிய வட்டாரங்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த புதிய வட்டாரங்களின் தேவைகளை அவ்வவ் வட்டாரங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டு, நடவடிக்கைகளை மேற்கொள்ள தலைவர் திட்டமிட்டுள்ளார்.

மின்சார பாக்கிப் பணம் கூடுதலாகச் செலுத்தவேண்டியிருப்பதால் சிக்கன நடவடிக்கைகளையும் அவர்மேற்கொண்டுள்ளார். வீதிவிளக்குகள் சிலவற்றை இரவு 9 மணிக்குப் பின்னரே உபயோகிப்பதென்ற முடிவை எடுத்துள்ளார். மின்சார விளக்குகளை கூடுதலான வரை குறைத்து உபயோகிக்கும்படி வீட்டுச் சொந்தக்காரரைக் கேட்டிருக்கிறார்.

— —

## ஜீ. சி. ஈ. விஞ்ஞானத்தாள் பரிசீலனை

பருத்தித்துறை, ஞாயிறு
க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான இரசாயனம், பௌதிகம், உயிரியல் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைவினாக்கள் தயாரிப்பது பற்றி வடமாநிலக் கல்வி அதிபதி திரு. மகாதந்தில, ஒவ்வொரு பாடத்திற்குமான ஐந்து அனுபவமிக்க சிரேட்ட ஆசிரியர் கொண்ட குழுக்களை நியமித்துள்ளார். இவ்வாறே ஒவ்வொருமாகாணத்திலும் வேறு குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. இக்குழுக்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இப்பாடங்களுக்கான வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்பட விருப்பதாகத் தெரிகிறது.

# அனலைதீவு கி.ச. முடிவுபற்றி காங்கேசன் ப.ச. தீர்மானம்

காங்கேசன்துறை, ஞாயிறு
"கூட்டுறவு புனருத்தாரணத்தின்கீழ் வடமாகாணத்தில் பிரதான கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் பொழுது அவற்றில் ஒரு பிரதான சங்கத்தை காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் நிறுவவேண்டுமென உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சரையும், கூட்டுறவு ஆணையாளரையும் கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானம்" காங்கேசன்துறைப் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

பின்வரும் பிரேரணைகளும் முன்னாள் ப. ச. தலைவர் திரு. க. ஜெயபால சிங்கத்தினால் கொண்டுவரப்பட்டு சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

'அனலைதீவு கடற்றொழில் செய்யும் மயிலிட்டி மீனவர்களிடமிருந்து அதிகமான வரியை அறிவிட அனலைதீவு கிராமசபை தீர்மானித்துள்ளது. இவ்வரியை முன்னுள்ளது போன்று வருடத்திற்கு ரூபா 40/-க்கு மேல் அதிகரிக்க வேண்டாமென அனலைதீவு கிராமசபையை பட்டினசபைகேட்டுக்கொள்கிறது.

இலங்கையில்மூன்றுபெரிய நெசவுத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு மக்கள் சிஅரசாங்கம் முன்வந்துள்ளதால், அவற்றில் ஒன்றை வடமாகாணத்தில் நிறுவும்படி அரசாங்கத்தை பட்டினசபை கேட்டுக் கொள்கின்றது.

பட்டின சபையின் செயலாளராகக் கடமையாற்றும் திரு. எஸ். கே. சின்னத்தம்பியின் சேவைக்காலம் இவ்வருடம் ஆடிமாதத்துடன் முடிவடைவதினால் அவரின் சேவையை ஒரு வருடத்திற்கு நீடிக்க வேண்டுமென அமைச்சரைக் கேட்டுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

— —

## கைதடியில் என். எம்.

யாழ்ப்பாணம், திங்கள்
கைதடி முத்துக்குமாரு வித்தியாலத்தின்புதியமண்டபத்தைஇன்று பகல் 11-30 மணிக்கு நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா திறந்துவைப்பார். இதனையடுத்து மேற்படி வித்தியாலயத்தின் 60 ஆண்டுவிழா வட.பிரதேச கல்வி அதிபதி தலைமையில் நடைபெறும். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## நால்வர் கைது

மன்னார், ஞாயிறு
முருங்கன் செம்மண் தீவுப் பகுதியில் நடைபெற்ற சிறுவன் கொலை சம்பந்தமாக சந்தேக நபர்கள் நால்வரை மன்னார் பொலிசார் கைது செய்துள்ளனர்.

யாழ். விளையாட்டு அரங்கில்

## இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படும், உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டி இன்று யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது.

இப்போட்டி, இலங்கையின் ஏனைய மாகாணங்களில் கடந்த வருடம் சாம்பியன்களாக வந்த பாடசாலைக் கோஷ்டிகளிடையே நடாத்தப்படுகின்றது

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம், பாடசாலைச் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும், கொக்குவில் இந்துக் கல்லூரியும் இப் போட்டியில் கலந்து கொள்கின்றன.

இப்போட்டி 27-ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும். (தே. நி)

## தாச்சிப் போட்டி

புதுக்குடியிருப்பு, ஞாயிறு
புதுக்குடியிருப்பு மத்திய சனசமூக நிலையத்து கோஷ்டிக்கும், இரணைப்பாலை ச. ச. நிலையத்து கோஷ்டிக்கும் புதுக்குடியிருப்பு ச. ச. நிலைய மைதானத்தில் நடைபெற்ற தாச்சிப்போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய சனசமூக நிலையம் 14-5 புள்ளி எடுத்து வெற்றியீட்டியது.

— —

## அழகிரிசாமி குடும்பத்துக்கு நிதி உதவி


வெள்ளவத்தை, ஞாயிறு
தமிழகத்தில் காலமான பிரபல எழுத்தாளர்திரு கு. அழகிரிசாமியின் குடும்பத்தினருக்கு நிதி திரட்டும் முயற்சியில்சிலஈழத்து எழுத்தாளர் நிறுவனங்கள் முயற்சி எடுத்துள்ளதாகத் தெரிகிறது. தமிழ்ச் சிறுகதை உலகில் புதுமைப்பித்தனுக்குப்பிறகு வந்தவர்களின் வரிசையில் அமரர் கு. அழகிரிசாமியும் புகழோடு வைக்கத்தக்கவர் என்று கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகம் தனது மாதக் கலந்துரையாடல் கூட்டமொன்றில் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

## கணேசா கோஷ்டி வெற்றி

உரும்பராய், ஞாயிறு
வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி பிரிவினரால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உரும்பராய் கணேசா விளையாட்டுக்கழகமும் உரும்பராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இவ் உதைபந்தாட்டப் போட்டியை வலிகிழக்கு விளையாட்டு அதிகாரி திரு. சி. சிவப்பிரகாசபிள்ளை தொடக்கி வைத்தார். கணேசா கோஷ்டியைச் சேர்ந்த காப்டன் ஆர். தங்கராஜா இரண்டு கோலையும் மதுரைநாயகம் இரண்டு கோலையும் ஞானசோதி ஒருகோலையும் போட்டு தங்களது கோஷ்டியை 5-0 கோல்களால் எதிர்க்கோஷ்டியை வெற்றி பெறச்செய்தனர்.

உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ் உதைபந்தாட்டப் போட்டிக்கு திரு. மார்க்கண்டு மத்தியஸ்தராகவிருந்தார்.



உங்கள் மண் பொன் விளையும் பூமியாக வளம் பெற...

சுமார் முக்கால் நூற்றுண்டு காலமாக இலங்கையின் விவசாயத் துறைக்கு அதி சிறந்த உர வகைகள், விவசாய ரசாயனப் பொருள்கள், தெளி கருவிகள் ஆகியவற்றை வழங்கி, இலங்கை மக்களின் காணி பூமிகளை வளமாக்கி, அவர்கள் அதிக விளைச்சலையும் அபரிமித இலாபத்தையும் பெறத் துணை நின்று வரும் முன்னேடி ஸ்தாபனம் பவர்ஸ். நீங்களும் உங்கள் மண்ணை வளமாக்கி செழிப்பான விளைச்சலைப் பெற பவர்ஸ் பொருள்களையே பாவியுங்கள்.

ஏ.பவர் அன் கொம்பனி லிமிடெட்
த. பெ. இல. 11. கொழும்பு.

# 'மக்கள் கமிட்டி' மசோதா நிறைவேறியது!

கொழும்பு, சனி

**தேர்தல் காலத்தில் பெரும் வாதப்பிரதிவாதத்துக்குள்ளான 'மக்கள் கமிட்டி' நிறுவப்படுவது சம்பந்தமான மசோதா இன்று ஆட்சிமன்றத்தில் சகல கூட்டங்களிலும் எதிர்ப்பின்றி நிறைவேறியது.**

மக்களுக்கும் நிர்வாகத்துக்குமிடையில் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்த இந்த 'மக்கள் கமிட்டிகள்' பெரிதும் உதவுமென்று பதில் பொதுநிர்வாக உள்நாட்டமைச்சர் திரு நீல்டி அல்விஸ் தெரிவித்தார்.

மக்கள் கமிட்டி சம்பந்தமாக நாட்டில் எதிர்த்து செய்யப்பட்ட பிரச்சாரங்களையெல்லாம் மக்கள் புறக்கணித்துவிட்டார்கள் என்றும் பதில்அமைச்சர் கூறினார்.

தேர்தல்காலத்தில் மக்கள் கமிட்டி' ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தபோதிலும் இப்போது இதன் உண்மையான நடவடிக்கைகளை உணர்ந்து வரவேற்பதாகத் தெரிவித்தார் நிந்தாவூர் எம். பி. திரு. முஸ்தாபா.

நாட்டுக்கு மிகவும் பயன்தரக்கூடியவிதத்தில் இந்த 'மக்கள் கமிட்டி' அமைந்துள்ளதென்றும் சொன்னார் அவர்.

மக்கள் கமிட்டி நிறுவப்படுவது சம்பந்தமான மசோதா மீதான விவாதத்தில் இன்று தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த உடுவில் எம் பி. திரு வி. தர்மலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோரும் பேசினர்.

பதில் அமைச்சர் திரு. நீல்டி அல்விஸ் பேசுகையில் வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது மக்கள் கமிட்டி பற்றி பலதரப்பட்ட கருத்துகள் தெரிவிக்கப்பட்டது. எதிர்க்கட்சியினர்தெரிவித்த சில கருத்துக்களை ஏற்று மாற்றங்கள் செய்துள்ளோம் என்றும் கூறினார்.

நியமன எம் பி திரு அஸீஸ் பேசுகையில், தோட்டத் தொழிலாளர்களும் மக்கள் கமிட்டியில் இடம்பெற வேண்டுமென்று வற்புறுத்தினார்.

## 'இதுவேறு அதுவேறு'

உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம் பேசுகையில், தேர்தல் காலத்து வாக்குறுதியை நிறைவேற்றுவதாக இப்போது கூறிக்கொள்ளப்படுகிறது. ஆனால் தேர்தல் காலததில் தெரிவிக்கப்பட்ட 'மக்கள் கமிட்டி' வேறு இப்போது கொண்டுவரப்பட்டுள்ள 'மக்கள் கமிட்டி' வேறு கச்சேரி முறையை ஒழிப்பதற்கு இந்த மக்கள் கமிட்டி வழிவகுக்குமென்று கூறப்பட்டது. ஆனால் கச்சேரிமுறை தொடர்ந்து இருப்பதற்கு இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடமளிக்கிறது. இதுதானா வாக்குறுதி?

உதவி போக்கு வரத்து அமைச்சர் திரு ஹேரத் பேசுகையில், 'மக்கள் கமிட்டி' இந்த நாட்டில் ஒரு பூரண சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க உதவ வேண்டுமென்றும், காலப் போக்கில் கச்சேரிமுறை ஒழிக்கப்பட்டுவிடு மென்றும் சொன்னார்.

# நேற்றிரவு ஸ்ரீமாவோ வந்து சேர்ந்தார்

கொழும்பு. சனி

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று இரவு 11 மணியளவில் நாடு திரும்பினார். சிங்கப்பூரில் நடைபெற்ற சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாடுகளில் கலந்துகொண்ட பின்னர் நேற்றிரவு இலங்கை திரும்பினார் இவருடன் சிங்கப்பூர் மகாநாட்டில் கலந்து கொண்ட கயானாபிரதமரும் அவரது பாரியாரும் நேற்றிரவு பிரதமர் ஸ்ரீமாவுடன் இலங்கை வந்து சேர்ந்தார்கள். பண்டாரநாயக்கா சர்வதேச நிலையத்தில் வந்திறங்கியபோது பதில்உள்நாட்டு, உள்ளூராட்சி அமைச்சர் நீல் டி அல்விஸ், போக்கு வரத்து அமைச்சர் லெஸ்லி குணவர்த்தனா ஆகியோர் வரவேற்றார்கள்.

# எதிர் நடவடிக்கைகளை பின்போட்டிருக்கிறாம்

## சாம்பியா அதிபர் தெரிவித்த கருத்து

கோட்டை, சனி

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் வழங்குவது பற்றி முடிவெடுப்பதை பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத் பின்போட்டிருப்பது போலவே எதிர் நடவடிக்கைகள் எடுப்பது பற்றிய தமது முடிவையும் பின்போட்டிருப்பதாக சாம்பியா அதிபர் கென்னத் கவுண்டா நேற்று கூறினார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு தாயகம் திரும்பும் வழியில் அதிபர் கவுண்டா நேற்றிரவு கட்டுநாயக்க பண்டாரநாயகா சர்வதேச விமானநிலையத்தில் சற்று நேரம் தரித்துச் செயினார்.

அதிபர் வந்த விமானம் இரவு சுமார் 11-10மணிக்கு தரை இறங்கியது. சுமார் 45 நிமிடங்கள் அதிபர் விமானநிலையத்தில் தங்கினார்.

பதில்பிரதமர் திரு. மைத்திரிபால சேனநாயகா, போக்குவத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்தனா, கல்கிசை மவுண்ட்லெவினியா எம். பி. திருமதி விவியன் குணவர்தனா ஆகியவர்கள் அதிபரை வரவேற்று உபசரித்தார்கள்.

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பது சம்பந்தமாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத் தெரிவித்துள்ள காரணங்கள் குறித்து தாம் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருப்பதாக அதிபர் கவுண்ட நிருபர்களிடம் கூறினார்.

ஆயுதம் வழங்குவதுபற்றி முடிவெடுப்பது பிரிட்டனின் உரிமையென்றால் எதிர் நடவடிக்கைகள் எடுப்பது எங்களின் உரிமையாகும் என்றும் அதிபர் கவுண்டா குறிப்பிட்டார்.

# பழச் செய்கைக்கு 1500 ஏக்கர்!

காலி, சனி

"வெளிநாடுகளில் எமது நாட்டு 'பாஷன்' பழங்களுக்கு நல்ல கிராக்கியிருக்கிறது. அவற்றைப் பெருமளவில் நாம் உற்பத்திசெய்தால் அவற்றை ஏற்றுமதி செய்யலாம்"

தோட்டத்தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அகலவத்தைத் தொகுதியில் இலஹெனவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "பாஷன்பழம் பயிர்செய்கை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவினால் வீட்டுத் தோட்டத்தில் பொழுதுபோக்காக ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பல பகுதிகளிலும் இப்பழச் செய்கை விஸ்தரிக்கப்பட்டது இப்பகுதியில் இப்பழச் செய்கை நல்ல பலனையளித்துள்ளது. எனது அமைச்சு மேலும் 1500 ஏக்கர் நிலப் பரப்பை இப்பழச் செய்கைக்கு ஒதுக்கவிருக்கிறது.

# உள்ளூர் பொருட்களுக்கு தரநிர்ணய முத்திரை

கோட்டை, சனி

உள்ளூர் உற்பத்தியின் தரத்தை பேணுவதற்கான நடவடிக்கையை கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா மேற்கொண்டுள்ளார். இதுபற்றி அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

உள்ளூர் பொருட்களின் தரத்தை நிர்ணயம் செய்வதற்கு தரநிர்ணயசபைக்கு வேண்டிய சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் தரப்படுத்தலை முக்கியமாக அமுல் நடாத்துவதின் மூலம்தான் பாவனையாளர்களின் நம்பிக்கையைப் பெறமுடியும். பாவனையாளர்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்களில் கொள்ளும் நம்பிக்கையே அதன் உற்பத்தி பெருக்கத்திற்கு வழிகோலும்

சகல உள்ளூர் உற்பத்தி பொருட்களின் தரத்தை நிர்ணயம் செய்து உத்தரவாத முத்திரை பொறிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# தமிழ் மாணவர் பேரவை அங்குரார்ப் பணம்

வல்வெட்டித்துறை, சனி

'கல்வி மந்திரியின் தரப்படுத்தல் கொள்கையினால் தமிழ் மாணவரின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. வருங்காலத்தில் தமிழ் மக்கள் அரசாங்க உத்தியோகத்தைநம்பியிருக்காது கூட்டுறவு முறையில் தொழில்முறைகளைச் செய்து கொள்ள முன்வரவேண்டும்' என வல்வெட்டித்துறை ரேவடிக் கடற்கரை மைதானத்தில் நடந்த தமிழ்மாணவர் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் திரு. சத்தியசீலன் கூறினார்.

திரு. யோகரத்தினம் தலைமைவகித்தார். ரஷ்யா, ஜெர்மன், இந்திப் பாஷைகளை சிங்களப் பகுதிகளில் கற்பிப்பதன் மூலம் வெளிநாட்டு உபகாரக் கல்விக்கு தமிழ் மாணவர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது எனத் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

# கோழியுடன் ஓட முயன்றாராம்

சுழிபுரம், ஞாயிறு

கதிர்காமத் தண்ணீர்ப் பந்தலுக்கு காசு சேர்ப்பதாகக் கூறிக்கொண்டு வீடொன்றுக்குள் நுழைந்தவர் கோழியைப் பிடித்துக் கொண்டு ஓடமுயன்றாராம். பண்ணாகம் என்ற இடத்தில் இச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

கோழியைப் பிடித்து பையுக்குள் போட்டுக் கொண்டிருக்கும்போது திடீரென அங்கு ஒருவர் வரவே, கோழியை வெளியே எறிந்துவிட்டு ஓடமுயன்றாராம். அவரை விடாது பிடித்து தக்க பாடம் படிப்பித்து அனுப்பினார்களாம். கோழியைப் பிடித்தவரின் கையில் கதிர்காமத் தண்ணீர் பந்தலுக்கான ரசீதுகள் இருந்ததாம்.

# ஒரிஸா சட்டசபை கலைக்கப்பட்டது

புதுடில்லி, சனி

ஒரிஸாவின் சட்ட சபையும் இன்று கலைக்கப்பட்டது. இந்திய லோக்சபைத் தேர்தலுடன் சட்ட சபைக்கான தேர்தலும் நடைபெறும்.

## பாகிஸ்தான் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறர். இவரை வெளியேற்றவேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டதையிட்டு வருந்துகிறோம் என்று கூறும் அவ்வறிக்கையில் 48 மணி நேரத்தில் முதல்காரியதரிசி இந்தியாவைவிட்டு வெளியேறவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளார்.

## கனடா பிரதமர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தை இணைக்கும் ரோட்டுக்கு 'கனடா-இலங்கை நட்புறவுச்சங்கவீதி' என்றுபெயரிடுவார்.

மிகவும் அழகான உடற்கட்டுக்கொண்டவர் 'இளைஞர்' என்று கனடா பிரதமர் திரு. ரூடோ வர்ணிக்கப்பட்டுவருபவர்.

சிங்கப்பூரில் நடந்த சாம்ராஜ்யப் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துவிட்டு அங்கிருந்து இவர் இங்கு விஜயம் செய்கிறர்.

# 'காங்கிரஸ் முடிவு விவேகமானது'

கிளிநொச்சி, சனி

"இலங்கையில் இன்று தோன்றியுள்ள அரசியல் நிலையில் தமிழ்பேசும் மக்கள் தமது உரிமைகளைப் பெறுவர் என்பதில் சந்தேகமில்லை. நாட்டின் முக்கிய பிரச்னைகளைத் தீர்த்துவைக்க துரிதநடவடிக்கை எடுத்து வரும் ஐக்கியமுன்னணி அரசாங்கத்தை தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ஆதரிக்க முடிவுசெய்தது விவேகமானதாகும்"

மேற்கண்டவாறு கிளிநொச்சி தமிழ்க்காங்கிரஸ் கட்சிக் கிளைச்செயலாளர் திரு த. சற்குணநாதன் காங்கிரஸ் எம். பி.க்கள் அரசாங்கத்தை ஆதரித்தது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

# இரத்தினக் கல் கூட்டுத்தாபன மசோதா

கோட்டை, ஞாயிறு

இரத்தினக் கூட்டுத்தாபன மசோதாவை நிதிஅமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா இன்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இரத்தினக்கல் வியாபாரத்தில் சம்பந்தப்பட்ட எவருமே இந்தக் கூட்டுத்தாபனத்தில் அங்கம்வகிக்க இடம் அளிக்கப்படமாட்டார்களென்று டாக்டர் பெரேரா இந்த மசோதாவைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினார்.

யாழ்,கச்சேரியில்

# தமிழ் மூலம் சிங்களம் கற்க வசதி

யாழ்ப்பாணம், திங்கள்

அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர் சங்க யாழ். கிளையினரின் நீண்டகாலக் கோரிக்கை பயனளித்துள்ளது. இதுவரை காலமும் ஆங்கிலமூலம்சிங்களம்கற்று வந்த அரசாங்க ஊழியர்கள் தமிழ்மூலம் சிங்களம் கற்க யாழ். அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா ஒழுங்கு செய்து கொடுத்துள்ளார்.

இம் மாதம் 12ந் திகதி முதல் பகுதிநேர ஆசிரியராக திரு. கருணரட்ன என்பவர் பணியாற்றுகின்றார். இதிற்குரிய நேர அட்டவணையை ஒவ்வொரு இலாகாவுக்கும் அனுப்பிவைக்கப்படவிருக்கிறது. தமிழ்மூலம் சிங்களம் கற்கவிரும்புவோர் மேற்படி சங்க இணைச்செயலாளர் திரு. சி ஆறுமுகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (குவிம)

# கால்நடை உணவாக கழிவு தோல்

கோட்டை, திங்கள்

இலங்கையின்கழிவு தோலை கால் நடைகளுக்கு உணவாக்க நெதர்லாந்து எதிர்காலத்தில் வாங்குவதற்கு முன்வந்துள்ளது.

மட்டக்குளியா தோற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலையில் கழிவு தோல் பெருந்தொகையில் வீணாக எறியப்படுகின்றது. இந்த கழிவுதோலை நெதர்லாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை தோற்பொருட் கூட்டுஸ்தாபனம் மேற்கொண்டுள்ளது நெதர்லாந்தில் இருந்து சமீபத்தில் இலங்கைக்கு வந்த வர்த்தகக் குழுவொன்றுடன் தற்போது தேங்கிக்கிடக்கும் 30தொன்கழிவுதோலைஏற்றுமதி செய்வதற்கான பேச்சுவார்த்தையை நடாத்தியுள்ளது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது